52

# Poovarasu

# பூவரசு






இனிய தமிழ் ஏடு
இருதிங்கள் ஒன்று

ஆடி ஆவணி 1998

http :\\www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL) 910/09
பொன்னாச்சி ரசன்




## மண்ணோக்கிப் பாராயோ?

இறைமகன் குடியிருப்பே
இரத்தக்கறைபடிந்த சிலுவையடி அழுதவளே!
பிள்ளைக்கினிய தாய் உறவே! – உன்
உள்ளம் தாய்மையின் தனித்துவமே!
வளர்பிறை எழில் அழகே!
விண்ணோக்கிஎழுந்த பேரொளியே – நாம்
வணங்கும் மாமருவின் தாய்மரியே! – எம்
மண்ணில் எரிமலை ஏனம்மா? – நிதம்
மண்சிவப்பாகும் காட்சிபாரம்மா!
விண்ணிருந்து மண்ணோக்கிப் பாராயோ – உன்
தண்ணொளியின் கதிர்வீச்சால் –
எம் மக்கள் ஒளிபெற்று
வாழ்விடங்கள் நாடாரோ?

-புஷ்பராணிஜோர்ஜ்.

## வாழ்த்துப் பூக்கள்.

அன்பு வணக்கம்!
பூவரசு இதழைக் கண்டு என் மனவாய் பாச்சரம் பாடியது. நீண்ட இடைவெளிக்குப் பிறகு ஒரு கனமான இலக்கிய ஏட்டைப் படித்த திருப்தி இதயம் முழுதும் கவ்வியது
தமிழர்தம் நடப்பு நிகழ்வுகளைப் படம்பிடித்துக் காட்டுகின்ற கடப்பாடு இலக்கியத்திற்கு உண்டு.
வெறும் சொர்க்கலோக உப்புச் சப்பற்ற சமாச்சாரங்களை வாசித்து வாசித்து இத்துணைக் கால அளவை விரயமாக்கியதாய் உணர இயல்கிறது. பூவரசு இதழை மனதார வாழ்த்தி வாசிக்கவும் சுவாசிக்கவும் முடிகின்றது.
ஓர் அக்கினித் தடாகத்திலிருந்து எப்படி உங்களால் கூவ முடிகிறது?
வியக்கின்ற அதே போழ்தில் வியர்க்கவும் செய்கின்றேன்.
இன்று மலேயாவில்மட்டுமல்ல உலகம் முழுவதிலிருந்து புலம் பெயர்ந்தோர் படைப்புக்கள் விழுமிய கவனத்தை ஈர்த்து வருகின்றன.
படைப்புக்கள் யாவும் கண்ணீரைச்சுமந்துகொண்டும் வீடுதலை வேட்கையோடும் ஒலிப்பதால் அவற்றிற்குத் தனி இலக்கிய அந்தஸ்தும் கிடைத்து விடுகின்றன.
தங்களின் இலக்கியப்பணி வெல்க! வெல்க! வெல்க!
நன்றி!

ஏ.தேவராஜன்
(ஜாசின், மலேசியா)

பூவரசு ஆசிரியர் திரு.இந்துமகேஷ் அவர்களுக்கு!

வணக்கம்! பூவரசுபற்றி எனது கருத்துக்களை உங்களுக்கு எழுதவேண்டும் என்று அடிக்கடி நினைப்பதுண்டு. ஆனால் முடிவதில்லை. நாங்கள் எழுதாவிட்டால் எங்கள் கருத்துக்களை நீங்கள் எப்படித் தெரிந்து கொள்வது? இன்றைக்கு பிடிவாதமாக உட்கார்ந்து எழுதுகிறேன்.

பூவரசு தனது 50வது இதழையும் வெளியிட்டு தொடர்ந்தும் வந்துகொண்டிருக்கிறது. வளரும் எழுத்தாளர் முதல் முதுபெரும் எழுத்தாளர் வல்லிக்கண்ணன் வரை அது பாராட்டுக்களையும் பெறுகிறது. பூவரசைத் தரமான ஒரு சஞ்சிகையாக வெளிக்கொணர்வதற்கு நீங்கள் படக்கூடிய சிரமங்களையும் பொருளாதார நேர இழப்புக்களையும் என்னால் உணரமுடியும்.ஆனால் பூவரசு தொடர்ந்தும் இருதிங்கள் ஒன்று என்றே வெளியாகிக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் அதில் மேலும் பல சுருக்கமான விடயங்களை வெளியிடலாம். அதிகமான படைப்பாளர்களுக்கு அது வாய்ப்பளிப்பதாக இருக்கும். தொடர் அம்சங்களை நிறுத்துவது நல்லது என்பது எனது அபிப்பிராயம். வாரப் பத்திரிகைகளுக்குமட்டுமே தொடர்கள் பொருத்தமானதாக இருக்கும்.

மற்றவர்களின் கருத்துச்சுதந்திரத்திற்காகவே நீங்கள் தலையங்கம் எழுதுவதில்லை என்று ஒருதடவை குறிப்பிட்டிருந்தீர்கள். நீங்கள் தலையங்கம் என்று எதுவும் எழுதாவிட்டால் பூவரசின் கொள்கை என்ன என்பது எங்களுக்கு எப்படித்தெரியும் என்று ஒருவர் கேட்கிறார்.அவருக்கு நீங்கள் என்ன பதில் சொல்லப்போகிறீர்கள்?

இன்னுமொரு முக்கியமான விடயம் பூவரசு அடிக்கடி வாசகர்களை ஏமாற்றுகிறது. உதாரணமாக அடுத்த இதழில் இடம்பெறும் என்று நீங்கள் குறிப்பிடுகின்ற ஆக்கங்களில் பெரும்பாலானவை அடுத்த இதழில் இடம் பெறுவதேயில்லை. அடுத்தஇதழில் இடம்பெறமுடியாவிட்டால் அதனை ஏன் முன்னரே அறிவிக்கிறீர்கள். பேசாமல் விட்டுவிடவேண்டியதுதானே?!

ஆண்டுதோறும் போட்டிகளை நடாத்துகிறீர்கள். பரிசுகளும் வழங்கி படைப்பாளர்களைக் கௌரவிக்கிறீர்கள் பாராட்டத்தக்கமுயற்சிதான் என்றாலும் பரிசுபெறும்படைப்புக்கள் மற்றும் பிரசுரத்திற்கென வரும் படைப்புக்கள் எல்லாவற்றையும் பூவரசு பிரசுரிப்பதில்லை. (அதற்குள் அடுத்த ஆண்டுப் போட்டிகளை அறிவித்துவிடுகிறீர்கள்) இதனால்தான்தொடர் அம்சங்களை நிறுத்தும்படி உங்களைக் கோருகிறேன். அந்தப் பக்கங்களில் போட்டிக்கு வந்து தெரிவாகும் படைப்புக்களை வெளியிடலாம் அல்லவா?

இவைகள் எனது கருத்துக்கள். எனது கருத்துக்களை நான் சொன்னாலும் முடிவெடுக்க வேண்டியவர் நீங்கள்தான். இந்தக் கடிதத்தை வாசகர்கடிதம் பகுதிக்காக நான் எழுதவில்லை.எனது கடிதத்தைப் பிரசுரிக்காவிட்டாலும் எனது கருத்துக்களை நீங்கள் பரிசீலிக்க வேண்டுமென்பது எனது விருப்பம்.வளர்க பூவரசு!

அன்பன்

எஸ்.தியாகராஜா (சுவிஸ்)



# அன்புள்ள தம்பிக்கு!

வெரித்தாஸ்வானொலி பொறுப்பாளர் வண.பிதா.கெஸ்பராஜ் அடிகளார் உரை கண்களில் கண்ணீரை வரவழைத்தது என்று எழுதியிருந்தாய்

எமது மண்ணிற்கே செல்லாத ஒருவர் இந்த அளவுக்கு மனவேதனைப் படுகிறார் என்றால் அந்த மண்ணில் பிறந்துவளர்ந்து புலம் பெயர்ந்த தமிழர்கள் எந்த அளவுக்கு இந்த மண்ணை நேசிக்கவேண்டும் என்று கேட்டிருந்தாய்.

ஆனால் மண்ணில் எம் உறவுகள் படும் அல்லல்களை அறியாதவர்போல் போட்டிபோட்டுக்கொண்டு பிறந்ததினவிழாக்களை நடாத்துவதிலும், நகைகள் வாங்குவதிலும் சீட்டு பிடித்து வட்டிக்குக் கொடுப்பதிலும் எம்மவர் இங்கே முன்னிற்பது வருத்தத்திற்குரியது என்று குறிப்பிட்டிருந்தாய்.உண்மைதான். இம்மனத்தாங்கல் நாட்டை நேசிக்கும் சிலரிடம் இருக்கின்றது. ஆனால் இந்த விழாக்களை நடாத்தும் பலர் நாட்டை மறக்காமல் தமது பங்களிப்பைச் செய்து வருவதையும் இங்கு குறிப்பிட்டாகவேண்டும்.

ஏனையோரும் நாட்டைமறக்காத நற்பணி புரியவேண்டும் என்பதையே உன்னைப்போல நானும் விரும்புகின்றேன். ஆனால் அவர்களாகவே மனத்தளவில் விரும்பி இதற்கு முன்வரவேண்டும். புலம்பெயர் மக்கள் எந்தநிலையிலும் தம்முன்னுள்ள கடமையை மறக்கலாகாது.

ஆனால் ஒரு சிலரின் தவறுக்காக எல்லோரையும் நாம் பிழைசொல்வது எப்படி?

புலம்பெயர்ந்தாலும் நாம் தமிழர் என்பதை உலகுக்கு நிரூபிக்கும் நேரம் வந்துவிட்டது. தமிழீழ விடுதலைப் போராட்டத்துடன் நாமும் இணைந்து கொள்வதன் மூலமே இதனை நாம் சாதிக்க முடியும்.

**புலம் பெயர்ந்தாலும் நாம் தமிழர் என்பதை உலகின்முன் நிரூபிக்கும் நேரம் வந்துவிட்டது.**

இன்று உலகின் பல நாடுகளில்வாழும் புலம்பெயர் தமிழ்மக்கள் விழிப்படைந்துவிட்டார்கள் எனச் செய்திகள் தெரிவிக்கும்போது என்னைப் போல் நீயும் மகிழ்ச்சியடைவாய் என்பதை நான் அறிவேன்.

தமிழீழத் தேசியத் தலைவர் மேன்மைதகு. வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் புலம்பெயர் தமிழ்மக்களுக்கு விடுத்த செய்தியை நீயும் கேட்டிருப்பாய்.

அவரின் செய்தியைக்கேட்ட உலகத் தமிழர்களில் பெரும்பாலானோர் தமது கடமையைச் செய்ய முன்வந்துவிட்டனர். உலகிலுள்ள ஏனைய விடுதலை இயக்கங்களில் இல்லாத ஒரு விசேட நிகழ்வாக இதனைக்கருத முடியும்.

அதெப்படி என நீ வியப்புடன் கேள்வி எழுப்புவாய் என்பதை நான் அறிவேன். ஒரு தலைவரின் வேண்டுதலை ஏற்று புலம்பெயர்ந்துள்ள மக்களில் பெரும்பாலானோர் தாயக விடுதலைக்காய் ஒன்றிணைந்த முதல் சந்தர்ப்பமாக இதனைக் குறிப்பிட முடியும்.

எப்படியும் யாழ்ப்பாணத்துக்குப் பாதை அமைத்து அதனைச் சாதனையாக பிரகடனப் படுத்தவேண்டும் என்பதே ஜனாதிபதி சந்திரிகா அரசின் விருப்பம். அதற்காக என்ன விலை கொடுக்கவும் அந்த அரசு துணிந்துவிட்டது. ஆனால் இத்தனை அட்டூழியங்களும் மக்களின் வரிப்பணத்திலேயே நடக்கின்றன.

பத்திரிகை தணிக்கை விடயத்தில் புதுமுறையை சந்திரிகா அரசு கடைப் பிடித்துள்ளது. சிறிலங்காவின் பத்திரிகை தணிக்கை புதியதல்ல. சிறிலங்காவை ஆளும் இருகட்சிகளும் மாறிமாறி பத்திரிகைத்தணிக்கையை ஏற்படுத்தி அட்டூழியங்களை செய்துவிட்டு உலகக்கண்களின் பார்வையில் சிக்காமல் தப்பிக்கொள்ளும் சந்தர்ப்பங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

அழிவது தமிழ்மக்கள்தானே அழியட்டும் என்ற நினைப்பில் ஜெயசிக்குறு புதியதாக்குதல்களை ஆரம்பிக்க செய்தித்தணிக்கையையும் கையிலெடுத்துக் கொண்டார் சந்திரிகா.

ஆனால் பத்திரிகை தணிக்கை அதிகாரியாக இராணுவ அதிகாரி ஒருவரை நியமித்ததுதான் சிறிலங்காவில் ஜனநாயகத்திற்கு விழுந்த மற்றொரு அடி. ஏன் தமிழர்களுக்கு இழைக்கப்படும் மற்றொரு கொடுமை என்றும் குறிப்பிடலாமே. என்று நீ கேட்கலாம். உண்மைதான். வெளி உலகுக்கு தெரியாமல் எத்தனை தமிழர்கள் சித்திரவதை செய்யப்பட்டுள்ளார்கள்.

ஆனால் இம்முறை பத்திரிகைத்தணிக்கையை தமிழீழ விடுதலைப்புலிகள் முறியடித்துள்ளார்கள். எப்படி என்று கேட்கின்றாயா? 'இண்டநெற்' எனப்படும் தொலை அலை கணணிச் சேவை இன்று உலகில் தகவல் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது.இதன்மூலம் நாட்டில் நடக்கும் பல மனித உரிமை மீறல்களையும் தமிழீழ போர்க்களத்தில் சிறிலங்கா இராணுவத்தின் படுதோல்விகளையும் உலகுக்கு விடுதலைப் புலிகள் அறிவித்துக் கொண்டிருக்கின்றார்கள்.



நாட்டில் இன்று ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து ஓரளவு அறிந்திருப்பாய் என நினைக்கிறேன். செய்தித் தணிக்கைகளையும் மீறி அங்கிருந்து வெளிவரும் செய்திகளை புலம்பெயர் தமிழர்கள் மத்தியில் தகவல் தொடர்பு சாதனங்கள் வெளியிட்டுக்கொண்டிருக்கின்றன.

தமிழீழத்தில் மக்கள்படும் இன்னல்களை எழுத்தில் வடித்துச் சொல்ல முடியாது. அந்த மக்களின் — எங்கள் உறவுகளின் — துயர் துடைப்பிற்காக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் புலம்பெயர் தமிழர் மத்தியில் நிதியுதவி வேண்டிநிற்கின்றது.

தமிழர் புனர் வாழ்வுக்கழகத்தின் சர்தேசக் கிளை இதற்கான பரப்புரைகளை மேற்கொண்டுள்ளதை நீயும் அறிந்திருப்பாய்

இவர்கள் சேர்க்கும் பணம் எமது நாட்டுக்குப் போய்ச்சேர்கின்றதா? எவ்வாறான திட்டங்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் அங்கு செயற்படுத்துகின்றது போன்ற விபரங்கள் உனக்குக்கூட சில வேளை தெரியாமலிருக்கலாம்.

## வன்னிப் பெருநிலப் பரப்பில் வாழும் மக்களின் எண்ணிக்கைக் கணிப்பீடு

அ. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம்

| மாவட்டம் | நிரந்தர குடிமக்கள் | இடம்பெயர்ந்தோர் | மொத்தம் |
|---|---|---|---|
| கிளிநொச்சி | 28,995 | 223,782 | 252,777 |
| முல்லைத்தீவு | 89,208 | 170,541 | 259,749 |
| மன்னார் | 13,408 | 75521 | 88,929 |
| வவுனியா | 16,516 | 63,387 | 79,903 |
| **மொத்தம்** | **148,127** | **533,231** | **681,358** |

ஆ. விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசம்

| மாவட்டம் | நிரந்தர குடிமக்கள் | இடம்பெயர்ந்தோர் | மொத்தம் |
|---|---|---|---|
| மன்னார் | 25,279 | 5,035 | 30,314 |
| வவுனியா | 65,967 | 17,816 | 83,783 |
| **மொத்தம்** | **91,246** | **22,851** | **114097** |

தமிழர் புனர்வாழ்வுக்கழகம் சிறிலங்காவிலேயே பதிவு செய்யப்பட்டதொரு அமைப்பு. இந்த அமைப்பு ஐ.நா.சபை யூனிசெப் உட்பட ஆறு வெளிநாட்டு அமைப்புக்களுடன் இணைந்து முழுக்க முழுக்க எவ்வித உதவியுமின்றி வன்னிப் பெருநிலப் பரப்பில் தமது சேவையை ஆற்றிவருகின்றது.

1997ம் ஆண்டு துயர் துடைப்பு நாட்களின்போது புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களிடமிருந்து ஒரு கோடி அமெரிக்க டொலர்கள் சேர்க்கப் பட்டதை அறிந்தால் நீயும் மிகவும் மகிழ்ச்சியடைவாய் என நினைக்கிறேன்.

இந்தப்பணம் முழுவதும் தமிழீழத்திற்கு அனுப்பப்பட்டு அங்கு தமிழர் பிரதேசங்களில் கல்வி, சுகாதாரம், போசாக்கு, விவசாயம், உணவு நிவாரணம், வீடமைப்பு ஆகிய துறைகளுக்கு தேவைஅடிப்படையில் செலவிடப்பட்டது என தமிழர் புனர்வாழ்வுக் கழகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் இவ்வருடம் இப் பங்களிப்பு இரட்டிப்பாக்கப்பட்டால் பாதிக்கப்படும் மக்களின் அடிப்படைத்தேவைகளை எம்மால் முழுமையாகப் பூர்த்தி செய்ய முடியுமென தமிழர் புனர்வாழ்வுக் கழகம் எதிர்பார்க்கின்றது.

அது ஏற்படுத்தவுள்ள செயற்திட்டங்களுக்கு சுமார் நூறுகோடி ரூபாய்க்கு மேலான நிதி தேவை. நிச்சயம் இந்தத் தொகையை புலம்பெயர் வாழ் தமிழ்மக்கள் நினைத்தால் கொடுத்துவிட முடியும். எமதுமக்களின் அன்றாடத் தேவைகளை பூர்த்தி செய்ய நாம் மனதுவைத்துச் செயற்பட்டால் நிச்சயம் முடியும் தம்பி!

வன்னிப் பெருநிலப் பரப்பில் வாழும் மக்களின் உண்மையான தொகை என்னவென நீ அடிக்கடி கேட்பதுண்டு.அல்லவா? அதனை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சர்வதேச ஏடான 'எதிர்காலம்' புள்ளிவிபரங்களுடன் வெளியிட்டுள்ளது.அதனை இத்துடன் இணைத்துள்ளேன்.

இந்த மக்களுக்கு உதவுவது காலத்தின் கட்டாயம்.

நாம் புலம் பெயர்ந்தாலும் தமிழர்கள் என்பதை நிரூபிக்கும் கால கட்டம் இது என்பதை மீண்டும் வலியுறுத்தி விடைபெறுகின்றேன்.

நன்றி.

இங்ஙனம்
அன்புடன் அண்ணன்
**வீ.ஆர்.வரதராஜா.**



**இந்துமகேஷ்**

எழுதும்



# இரட்டை வேடம்.

(நெடுங்கவிதை)

அடுத்த இதழில்!

# எங்குதான் செல்வாய் இனி?

இ.சம்பந்தன்

நதியது ஓடிச்சென்று கடலுடனேதான்சேரும்.
மதியது ஓடிச் சென்று விதியுடனேதான் சேரும்
பகலது ஓடிச் சென்று இரவுடனேதான் கூடுமே
பகலென்ன இரவென்ன பதட்டமுடன் ஓடுகின்ற தமிழா!
எங்கேதான் ஓடுகின்றாய் எண்ணிப் பார்த்தாயோ?
சொந்த தேசத்திலே உயிர் காக்கவே ஓடுகின்றாய்
வந்த தேசத்திலோ வசதி நாடியே ஓடுகின்றாய்
எங்குதான் செல்வாய் இனி? என் நண்பனே பதில் சொல்வாய்!

கடலைவிட்டுக் கடலலைகள் கணநேரம் பிரிவிதில்லையே
கண்ணைவிட்டு இமைகள் கடைசிவரைபிரிவதில்லையே
விண்ணைவிட்டு வெண்ணிலவு வீதிக்கு வருவதில்லையே
கண்ணான விடுதலைவிட்டு கப்பலேறி வந்தோரே
பொன்னான போராட்டம் மறந்து பொழுதுகளைத் தொலைப்போரே
வேரோடறுத்து வீதியிலே வீசியெறிந்த வேளையிலும்
போராட வக்கின்றி பொய்யுரைத்துத் திரிபவரே
எங்குதான் செல்வோம் இனி? என் இனமே பதில் சொல்லுங்களேன்!

பண்ணிழந்த பாடலுக்குப் பார்தனில் மதிப்புண்டோ
மண்ணிழந்த உந்தனுக்கு மறுதேசத்திலும் மதிப்பேது
பொன்னையும் பொருளையும் நீயோ பொலிவாகவே தேடலாம்
மண்ணையும் மனையையும் மனம்போலவே வாங்கலாம்
அத்தனையும் நிலைக்குமாவென்று அரைவினாடி யோசி!
குந்தியிருப்பதோ குரோதம் நிறைந்த மண்ணல்லவோ?
காக்கையின் கூடதில் குயில்குஞ்சு கனகாலம் வாழுமோ?
ஆக்கையும் அழியலாம் அனர்த்தங்களும் தோன்றலாம்.
எங்குதான் செல்வாய் இனி? என் நெஞ்சமே பதில்கூறு!

வானகத்தில் நகைக்கடைபரப்பிய வனப்பான நட்சத்திரங்கள்
வையகத்தில் வந்திறங்கி வாழுமேயென்றால் வாழ்வுதான் இனிக்குமா?
கானகத்தில் துள்ளித்திரிந்த கலைமான் ஜோடியுடன்
காட்டைவிட்டேகி நாட்டிலே வாழவெண்ணுமோ?
சோலையிலே ஜோடியுடன் பாடிய சுதந்திரக் கிளியது
கூண்டிலே வந்து தானாகவே குடியேறத்தான் விரும்புமோ?
எங்கெங்கே எதுவிருந்தால் இகவாழ்வில் இன்பமதுபோல்
அங்கே நீ சென்று வாழ்ந்தால் ஆனந்தத்தின் எல்லையன்றோ?

ஐரோப்பாவை விட்டுவிட்டே அமெரிக்கா கனடா செல்வாய்
அங்கிருந்து மனமேங்கி அவுஸ்திரேலியா மேலென்பாய்
இக்கரைக்கு என்றுமே அக்கரைப் பச்சையே
எக்கரை சென்றாலுமே ஏங்குமிந்த மனமே
அலைபாயும் உன்மனதை அடக்கியாளப் பழகிவிடு
உலைவாயைப்போல் உன்வாயை உருவாக்கிடாமல்
விலைபோகா உறுதியுடன் வெற்றிநடை போட்டுவிட்டால்
எங்கேதான் சென்றாலும் இனிதாகவே வாழ்ந்திடுவாய்

வேரிழந்த வாழ்வும் வெம்பியழுகின்ற ஓசையும்
கூண்விழுந்த துரோகிகளும் குதறுகின்ற ஓநாய்களும்
தானழிந்து போவதற்கே தமிழா நீ புறப்படடா!
கங்குல் கிழித்தங்கே கதிரொளி பரவட்டுமே
செங்கதிரோன் வரவுகண்டு செந்தாமரை மலரட்டுமே
செந்நெல் விளையுமங்கே செந்தமிழீர் மகிழ்வீரங்கே
அங்குதான் செல்வீர் அடிமைவாழ்வின்றி வாழ்வீர்
எங்குதான் செல்வோம் என்று கவலை இனிவாழ்வில் கொள்ளாதீர்!

(7வது ஆண்டுநிறைவுப் போட்டியில் 3வது பரிசுபெற்ற கவிதை)

## பூவரசு கலை இலக்கியப்பேரவையின் நூலகக் கண்காட்சி 1998.
### – சில குறிப்புக்கள்.

கடந்த பங்குனித் திங்களில் பூவரசு கலை இலக்கியப் பேரவையால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நூற் கண்காட்சியில் புலம்பெயர் மண்ணில் வெளியான வெளிவந்து கொண்டிருக்கும் சிற்றிதழ்களையும் பத்திரிகைகளையும் பார்வைக்கு வைக்கும் எண்ணத்திலேயே இதனை ஒழுங்கு செய்திருந்தோம். சஞ்சிகையாளர்கள் அதிகளவு ஒத்துழைக்காதபோதும் பூவரசின் படைப்பாளர்கள் வாசகர்கள் தங்களால் இயன்றளவு நூல்களைச் சேகரிப்பதற்கு பெருமளவில் எமக்கு உதவினார்கள்.

புலம்பெயர் மண்ணில் வெளியான– வெளிவந்து கொண்டிருக்கும் சஞ்சிகைகள், பத்திரிகைகளுடன் கூடவே தமிழ்நாட்டிலிருந்து வெளிவரும் சிற்றிதழ்களும் இலக்கிய இதழ்களும் வாசகர்களால் சேகரிக்கப் பட்டிருந்தன.

**நூலகக் கண்காட்சியில் இடம்பெற்ற இதழ்களின் விபரம்:**

**ஜேர்மனி:**
அலைகள், அரும்பு, இளைஞன், இளஞ்சூரியன், உலக விமர்சனம், ஊதா, ஏலையா, ஓவியா, கடல், கமலம், கலைவிளக்கு, சிறுவர் அமுதம், தளிர், தமிழ்நாதம், தமிழ் அருவி, தீபம், தூண்டில், தென்றல், தேனீ, நம்நாடு, பணி, பண்பாடு, பிரவாகம், புதுமை, பூஞ்சோலை, மண், வசந்தம், வண்ணத்துப்பூச்சி, விடுதலைக்குரல் ஜனனம்,

**சுவிஸ்:**
ஈழமலர், குமுறல், தமிழ்த்தாய், மனிதம்,

**நெதர்லாந்து:**
அ ஆ இ, சுமைகள்

**நோர்வே:**
சர்வதேசதமிழர், சுதந்திரதாகம், சுவடுகள்

**பிரான்ஸ்:**
எரிமலை, ஓசை, சுலாச்சாரம், சுதலி, கதம்பம், சிரித்திரு, தமிழ்முரசு, நண்பன், பாலம், மௌனம்



**இத்தாலி:**
உலகம், மழலை

**டென்மார்க்:**
உதயசூரியன், கற்பகம், குயிலோசை, சஞ்சீவி, சங்கமம், வசந்தம்.

**லண்டன்:**
ஈழகேசரி, லண்டன்முரசு

**ஈழம்:**
கலைமுகம், சிரித்திரன், மல்லிகை

**மலேசியா:**
அருவி, இதயம், மயில்

**தமிழ்நாடு:**
இலக்கு, கனவு, கவிதாசரண், கணையாழி, சிற்றிதழ் செய்தி சுபமங்களா, ஞானபீடம், தாமரை, புதியபார்வை, நந்தன்,

**கனடா:**
உதயம், காலம், தமிழர்தகவல், தமிழ்எழில், நான்காவது பரிமாணம், பார்வை

**அவுஸ்திரேலியா:**
அக்கினிக் குஞ்சு, அவுஸ்திரேலிய முரசு

**பத்திரிகைகள்:**
ஈழநாடு, ஈழமுரசு, ஈழம், தமிழருவி, வெற்றிமணி, தொடுவானம்,

---

இவற்றுடன் பூவரசு முதலாவது இதழிலிருந்து 50வது இதழ்வரையிலான 50 இதழ்களும் கண்காட்சியில் இடம்பெற்றன. புலம்பெயர் தமிழர்களால் நடாத்தப்படும் ஒன்றியங்கள், கழகங்கள், மன்றங்கள் சிலவற்றின் ஆண்டுமலர்களும் இக் கண்காட்சியில் வைக்கப்பட்டன.

---

**ஒரு வேண்டுகோள்!**

புகலிட இதழ்களில் பெரும்பாலானவைபற்றிய முழுமையான தகவல்கள் எமக்குக் கிட்டவில்லை. இச்சஞ்சிகைகளின் வெளியீட்டாளர்கள் அல்லது தொடக்க கால வாசகர்கள் இவைபற்றியவிபரங்களை எமக்கு அனுப்பி உதவக் கோருகிறோம்.

□□□

**கண்காட்சியில் இடம்பெற்ற இதழ்களைச் சேகரிக்க உதவியவர்கள்:**
திரு.இராஜன் முருகவேல், திரு.எஸ்.கந்தசாமி, திருமதி புஷ்பராணி ஜோர்ஜ்,
திரு.சிவபாலன், திரு.வேலணையூர் பொன்னண்ணா (டென்மார்க்)
திரு. ரி. செல்வகுமார் (டென்மார்க்) திரு.என்.ஸ்ரீதர் (பிரான்ஸ்)
திரு.க.ஸ்ரீதாஸ் (நெதர்லாந்த்) திரு.க.திருநாதன் (சுவிஸ்)

# குருடான கவிஞனுக்கு



முதுகெல்லாம் கம்பளிப்பூச்சி ஊர்வது போன்றதொரு உணர்வு. அடிவயிற்றில் வீச்சுவீச்சாக வலியொன்று.

விஜிக்கு இதுவொன்றும் புதிதல்ல. இப்போதும் கவனயீனத்தில் தவறி விட்டது. உடல் உபாதைகளை விட, மன உபாதை உருக் குலைத்தது.

குணா வேலைக்காய்த் தன்னை அவசரப்படுத்திய அரவம்கேட்டது.

"விஜி இங்க இதில குடிக்க, சாப்பிட எல்லாமிருக்கு. ஒழுங்காய் எடு. நீயும்நானும் இங்க எவ்வளவோ மகிழ்ச்சியாய் இருக்கலாம். எங்களிடம் என்ன தான் இல்லை? நீர் உலகத்தை உன் தலைக்குள்ளாக்கிக் கொள்கிறாய்.... பெரியவிடயங்களை இழந்து போகிறாய் இதால்" என்று சொல்லி முடிக்குமுன், "மகிழ்ச்சி என்று எதைச் சொல்கிறீர்கள்? நமக்காய் வாழ்ந்து முடிப்பதையா? எனக்காய் கொஞ்சம் ஒத்துழைத்துப் பாருங்கள். இப்ப போயிட்டுவாங்க."

குணா அவளை நெருங்கிவந்து தலையைத் தடவி,

"சரி சரி மொக்கு வாறன்".

குணா போய்விட்டான்.

-சுதா ஸரண்யன்



அவனை விரட்டிவிட்டதாய் மனம் வலித்தது.

எல்லாப் பெண்களும் கணவன் எப்போது வருவான், பேசுவான் என்று காத்திருப்பார்கள். அந்த சாதாரண மனைவியாகக்கூட இருக்கஇயலவில்லை. குணா தன் தாயிடம்போகும்போதெல்லாம் தாய் விதம்விதமாய் சாப்பாடாக்கிக் கொடுப்பதும், தாயைச் சுற்றிச்சுற்றி வந்து மாங்கனிபெற்ற பிள்ளையார்மாதிரி அனைத்தையுமே பெற்றுக்கொள்வதையும் விஜி பார்த்து இரசித்த வேளைகள் பல. அந்தச் சுகமெல்லாம் தாய்வீட்டோடுதான் அவனுக்கு. விஜியின் உலகம் வேறு. வேண்டியோ வேண்டாமலோ ஒட்டியது. தனிமை வேண்டும், சிந்திக்க வேண்டும், தீர்வு வைக்கவேணும் —

ஏதோவொன்று முன்னிற்கும் அவளுக்காய்!

நியூஸிலாந்திலிருந்து வந்ததிலிருந்து விஜி நிம்மதியற்று இருந்தாள். மீண்டும் மீண்டுமாய் அதே நினைப்புகள் அவளுள் வருத்தியது.

மூன்று மாதமுன்கிடைத்த விடுமுறைக்கு ரேணுஷாவைப் பார்க்கவே விஜியும் குணாவும் நியூஸிலாந்து போய்வந்தனர்.

"ஆநிரையும், மேநிரையுமாய் மேயும் காட்சியும் பச்சைப்பசேலென்ற பசுமைக் கம்பள விரிப்புமாயுள்ள பூமியிது. நீ இதைக் காணவேண்டாமா? உன் இலக்கியதாகத்தை பெருகூட்ட வேண்டாமா? உன்னை இங்கழைத்து உன்னோடு நானுமாய் இதை இரசிக்க வேண்டாமா? வா... வாடி"

ஒருமுறை செல்லமாக... அதட்டலாக அடிக்கடி அங்கிருந்து வரும் கடிதங்கள். விஜியை உள்ளாளும் ரேணுஷாவின் வார்த்தை உதைப்பால் புறப்பட்ட பயணமது.

நியூஸிலாந்து எம்பஸிக்கு (Embassy) விசா எடுக்கப் போனபோது அங்குள்ள பணிப்பாளன், "என்ன ஆடு மேய்க்கவா அங்கு போகிறீர்கள்?" என்று கேட்டபோது,

"அப்படியென்றால் இரும்பு அடிக்கவா இங்கு வந்தோம்?"

தமிழில் சொன்னதால் அவனுக்குப் புரியவில்லை. "பிற்ர.. (Bitte)" என்றான். அது அவன் மொழியில் வடிவமாகமுன் குணாவின் பார்வையால் விஜி மௌனித்தாள்.

முன்கூட்டியே குணா விஜியிடம் சொல்லியிருந்தான் —

"அங்கு இதமாகக் கதைக்க வேணும். விசா தரான். பிறகு ரேணுஷாவை விஜி பார்த்தமாதிரித்தான்" என்று வெருட்டி வைத்திருந்தான்.

நியூஸிலாந்துப் பயணம் நீண்ட பறப்பு. நீண்ட களைப்பு எல்லாம் கூடிவர விமானநிலையத்துக்கு அவர்கள் வந்திருந்தார்கள்.

ரேணுஷா, ரங்கன், குழந்தைகள்...

பத்துவருடங்கள். ஆம், ரேணுவின் அழகான குழந்தைகள் ஆணொன்று பாரதியாய், பெண்ணொன்று சாம்பவியாய் பூத்து நின்றன.

ரேணு இளைத்து கூந்தல்மெலிந்தும் அவளின் மேம்பாடான கல்வித்தரவுகள் கரைந்தும் கண்கள்...

விஜிக்கு அதிர்ச்சியாயிருந்தது. நீட்சியாக முன் ரேணுஷா தன் அன்பின் உன்னத வெளிப்பாடான பரிசாய் விஜியை முத்தமிட்டாள்.

விஜி வேடிக்கையாகத் தன் கன்னத்தைத் துடைத்துவிட்டாள்.
ரேணுஷா சிரித்தபடி, "ஓ இன்னும் இது உன்னைவிட்டுப் போகவில்லை" என்றாள்.
கல்லூரியில் பத்துவருடங்கள் ஒன்றாகப் படித்த இவர்கள் கல்லூரி விடுதியிலிருந்த வேளையது. விஜியின் பிறந்தநாளுக்கு ரேணுஷா, விஜியின் விடுதிக்குள் நுழைந்து விஜியின் பெட்சீற்றை இழுத்து அதே பரிசைக் கொடுத்துவிட்டு ஓடும்போது, விடுதி மேற்றன் கனகேஸ் அக்காவிடம் அகப்பட்டு காரமான பேச்சுடன் தண்டனை நாட்கள்.
பௌதீக ரீச்சருக்குப் பல் நீட்டு என்று சொன்னவள் நானிருக்க ரேணு அகப்பட்டு பௌதீக ஆய்வுகூடத்தில் அந்தப் பாடவேளைகளில் முழுந்தாளில் நின்ற வேளைகள்.
ரியூசன் வகுப்புகள், சைக்கிள் பவனிகள், மாங்காய்த் திருட்டுகள் எல்லாமே விஜியின் கண்ணில் நிழலாட தான் தமிழீழத்தில், தன் கல்லூரியில் நிற்பதுபோன்ற நினைப்பிலாழ....
ரேணுவின் வீடும் அருகில்தானிருந்தது. "என் வீட்டுத்தோட்டத்தில் எல்லாமே கேட்டுப் பார்... என் வீட்டு பன்னல்கம்பி எல்லாமே கேட்டுப் பார். உன் பெயரை அது சொல்லும்...."
அந்தப் பாடல் ரேணுவின் கடிதத்தில் விஜிக்காக வரையும்.
ரங்கன் ஜேர்மனியைப்பற்றி விசாரிப்பதும் வேடிக்கையாய்ப் பேசுவதுமாய் இருந்தான். இதற்கிடையில் ரேணுவும் அவள் காதல்க் கணவனும் ஒரு தடவையாவது பேசிக் கொள்ளவில்லை, விஜி இதைக் கவனிக்கத் தவறவில்லை. அன்றையநாள் ஓய்வில் கரைய, மறுநாள் குணா தன் உறவினர் ஒருவரைச் சந்திக்க பாரதியோடு போய்விட,
"என்ர மனையாள் விஜிக்கு விருப்பமான அனைத்தும் தேடி அடைத்து வைத்திருக்கிறா. விஜியின் ஒவ்வொரு விருப்பமும் அவவுக்கு மறக்கவில்லை. ஐஸ்கூட. இப்போதெல்லாம் உங்கட நினைப்புத்தான் அவவுன் அதிகம்." சொல்லிக்கொண்டு போன ரங்கனைப் பார்த்து —
"ஏன் ரங்கனுக்கு எங்க நினைப்பு இல்லையா?" என்று விஜி கேட்டதும் மெலிதாய்ச் சிரித்த ரங்கன் மௌனித்துவிட்டான்.
இவர்கள் நிலை என்னது? எப்போது உடைப்பெடுக்கும். அதை உள்வாங்கக் காத்திருந்தவேளை சாப்பிட ஆயத்தமானநேரம் ரங்கன் ஏதோவொன்றைச் சொல்ல வருவதும், விழுங்குவதுமாய்க் கண்ட விஜி,
"ரேணு எனக்காய் எவ்வளவு செய்திருக்கிறாய்.... ஒன்றுமே ஒதுக்க முடியாது."
அங்கு எதுவுமேநடக்காததுபோல் கலகலவென்ற பேச்சோடு அவ்வேளையை நிறைவாக்கினாள் விஜி.


ரங்கனுக்குப் பெரும் ஏமாற்றம். பழைய குப்பையொன்றை படுவேகமாய், இலகுவாய் மூடிவிட்ட விஜியின் பலம். பெண்கள் பலவீனப்பட்டவர்கள் அல்ல நீங்கள் எதைத் தொட்டாலும் என்பதை உணர்த்திற்று. ஆண்களின் ஆயுதம் மழுங்கடிக்கப்பட்டது.
தனக்கானவற்றைப் பகிர வாய்ப்பற்ற ரேணு தவிப்பதும் விஜிக்குத் தெரிந்தது. அன்றிரவு விஜிக்குத் தூக்கம் வரவில்லை. குணா களைப்போடு வந்து மூசிமூசி நித்திரையானான். விஜி குப்புறப் படுத்துப் பார்த்தாள். ஊகூம் வரவில்லை. 'One, two, 100வரை மூன்றுமொழியிலும் சொல்லிப் பார்த்தாள். வரவில்லை. "வசந்தகாலக் கோலங்கள்..." ஜானகியின் பாடலைப் பாடிப் பார்த்தாள். வரவேயில்லை. நினைத்து நினைத்து அழுதாள். ரேணுவுக்கு வாழ்வு பொய்த்துவிட்டது. ரங்கன் அயோக்கியன். பொறுக்கி என்றாலுமொரு இரக்கம் வந்தது. அதுவும் ரேணுவின் கணவன் என்பதாலோ...? அழுதழுது அரண்ட அசைவில் குணா விழித்துக் கொண்டான்.
"ஏய் என்னது... ஏன் மொக்கு" அணைத்த அவனுள் அவள் இன்னுமாய் அழுதாள்.
"எனக்குத் தெரியும். உனக்காய் நீஅழவில்லை. புதிதாய் இங்கென்ன வந்தது விஜி சொல்"
"ரேணு சந்தோசமாயில்லை. ரங்கன் மாறிவிட்டான். ரேணுவை எல்லா விதமாகவும் வருத்துகிறான். ரேணு செத்துப் போகிறாள். சாம்பவி என்னோடு வாறதாய் சொல்லுதப்பா."
விஜியைச் சமாதானப்படுத்த குணா —
"சில குடும்பங்கள் அப்படித்தான். நீ மொக்குத்தானே? இது புரியாது. இங்க நிற்க இயலாது. ஒரு Hotelலில் போய்த் தங்கியிருந்து வந்துபோய் அவர்கள் பிரச்சனையென்ன என்பதை அறிந்து தீர்வு காண முயல்வோம்" என்றான்.
"எனக்குத் தெரியும். உங்களிடம் இதுதான் சிலதை சொல்லாமலே எனக்குள் வைத்துக் குழம்புவது. உங்களுக்கு எப்பவும் சுகம்தான் முக்கியம். பிரச்சனைகளைத் தீர்க்கப் பார்க்கவேணும். எதிர்கொள்ள வேணும்" என்றாள் விஜி.
"அப்படியா? அப்ப நான்தான் படுமொக்கு" என்று குணா சொன்னதும் விஜிக்குச் சிரிப்பும் வந்தது.
"தண்ணீர் குடித்தால் நித்திரை வரும். நாளைக்குப் பேசுவம்."
அவ்வேளையில் ரங்கனின் குரலாய் —
"என்ன குணா தூக்கம் வரவில்லையா? புதுவிடம் பழகினால் சரி!" என்று வந்தது. விஜி என்னவோ சொல்ல வாயெடுக்க குணாவின் கை அவளின் வாயை அவசரமாகப் பொத்தியது.
ஒரு நிமிடம் ரேணுவைக் காணாத ரங்கன் அடித்துப் பறந்து திரிந்த நாட்கள் எத்தனை... ஏனிந்த மாற்றம்.... நித்திரையற்ற பொழுது புலர்ந்தது.

பாரதியின் ஊக்குவிப்பால் நீளமான அகலமான 'பார்க்' ஒன்றிற்குப் போவதற்கு அன்றையபொழுது தீர்மானிக்கப்பட்டது. அவர்கள் காத்திருந்த வேளை விஜிக்கும் ரேணுவுக்கும் வந்து சேர்ந்தது.

ரேணுதான் ஆரம்பித்தாள். "விஜி உன்னை நான் இங்கழைத்தது என் கோல வாழ்க்கை பங்கிட. ஒரு தீர்வு காண. இது என் தன்னலம்தான். எனக்கு ஒன்றுமே தோன்றுதில்லை. நீ என்னது வாழ்க்கைக்கு அக்கறை காட்டியும் உன்னது வார்த்தைக்கு கறைவைத்து, நட்புக்குரிய ஜதார்த்தம் உணராத எனக்கான தண்டனை அதிகம் இது."

"ரங்கன் என்மீது கொண்டது பொறாமையின் எழுச்சி. அந்த வெடிப்புத்தான் காதலானதா என்ற ஐயம் ரங்கனுக்கு மனைவியான சிந்நாளிலே புரிந்தேன். இனங்காண முடியாதுபோனது என் தப்புத்தான். தவறு வாழ்க்கையாகி விட்டது. வாழ்க்கை வாரிசுமாகிவிட்டது. ரங்கன் என்னோடு முரணாகும் போதெல்லாம் "ரதி, சகு, சக்தி எல்லாரும் என்னை விரும்பினர். உன்னிடம் மாட்டினது ஒரு சவால்தான். நீர் நினைத்துப்போட்டீர் ஏதோ உன்னில் நான் மயங்கியதாக" என்கிறார். இதற்குப் பிறகு என்னால் எப்படி ரங்கனோடு ஒட்டமுடியும். அந்நியப்பட்டுப் போனேன். பிள்ளைகளும் கேள்விகள் கேட்கத் தொடங்கியுள்ளனர். இங்கு நாம்படித்த கல்லூரி ஒன்றுகூடல் நடைபெறுவது உண்டு. வேலைசெய்யும் வாய்ப்புகளுண்டு.தொடர்ந்துபடிக்க வசதிகளுண்டு. எதிலும் என் பங்கில்லை. ஓரிரு தடவைபோய் வர ரங்கன் தானாகவொரு சந்தேகத்தை என்மேல்போட்டு முற்றிட்டுவிட்டார். விஜி, நீ சொல்வாயே அடிக்கடி 'ஒரு பெண்ணை எல்லாவித அடக்குமுறையிலிருந்தும் ஒடுக்க முயன்று தோல்வி கண்டால் அவள் ஒழுக்கத்தில் கறைபோட்டு பெண்ணை ஒடுக்கிவிடுவது எமது சமுதாயம்' என. அது வீட்டுக்குள்ளாய் எனக்காயுளது. முரட்டுக்கும், முரணுக்கும் ஈடுகொடுக்க முடியாது அவன் பிரிந்து போவானா என்றால் இதிலொரு வேடிக்கை. அவனுக்கு நான் வேணும். வெட்கம் கெட்ட வாழ்விது. இந்தப் பூமிக்குள் புதையுமுன் உன்னைக் காணவேண்டும். சிலசமயம் பிள்ளைகளே எனக்கு மறந்து போகிறது. ரங்கனுக்கு பிறந்தவை ரங்கனே பார்த்துக் கொள்ளட்டுமென எண்ணிய உந்தல்கள், பின்பு அவர்களைத் தனித்துவிடுவதாவென ஏக்கம் தடுக்கும். யாரிடம் சொல்லி நான் ஆறமுடியும். தேடியது நானல்லவா?!"

— சொல்லிக்கொண்டே போனாள்.

விஜிக்கு கூதலோடப் புல்லரித்தது.

வாயாடி — வளர்ச்சி,எழுச்சி,விழிப்புபெற்ற மாணவதலைவி மண்டியிட்டிருந்தாள். ரேணு ஹெட்கேர்ள் (Headgirl) அந்தச் சின்னத்தோடு மகளிர் கல்லூரி வராந்தையைச் சுற்றிவரும் கம்பீரமான தோற்றம். மடிப்புக் கலையாத அந்த வெள்ளைச்சேலை. அந்த இரட்டைப் பின்னல்.

"வெடி வருகுது. பட்டாசு வருகுது...." கண்டு அஞ்சும் மாணவிகள். அனைத்து ஆசிரியர்களிடம் 'ஜான்சி' என்ற பட்டம். அனைத்து முன்னெடுப்பிலும் அவள் பங்கின் வெற்றி. அனைத்துமே தோற்று நின்றது.



அவள் படித்த அந்தக் கல்லூரியின் இராப்போசன (டின்னர்) ஏற்பாட்டில் சந்தித்தவன்தான் ரங்கன். கல்லூரிகளில் மாணவ, மாணவிகளிடம் ஒரு புரிந்துணர்வை, விழிப்பை, ஒன்றியப்பாட்டை வளர்க்கவும், பல்கலைக்கழகப் பிரவேசத்திற்கான முன்பயிர்வைப் பகிரவும்தான் டின்னர் ஏற்பாடுகளை கல்லூரிகள் செய்வது வழக்கம். இவ்வேளைகளில் ஆண்கள் கல்லூரிகளிலிருந்து முறையே இவ்விரு மாணவர்கள் வருவார்கள். வரும் மாணவர்களும் அவர் கல்லூரியின் தேர்ச்சி திறமையுள்ள மாணவராயிருப்பதுண்டு. ரங்கன் சிறந்த கிரிக்கெட் வீரன், முதல் மாணவனும்கூட.

அன்றைய இராப்போசன வைபவத்தின் நிகழ்வுகளை விஜியும் ரேணுவும் ரங்கனும் சிறப்பாக்கிக் கொண்டிருந்தனர். 'விழிப்பு' என்ற தலைப்பில் திடீரெனப் பேசும் வாய்ப்பு ரேணுக்குக் கிட்டியது. "ஆண்கள் தங்களுக்கென சில சலுகைகளைத் தமதாக்கிக் கொண்டும் தாரக மந்திரமாக்கிக் கொண்டும் வாழும் நேரமிது. இந்த மூடத்தனத்தை மூடவேண்டும். கலாசார மடமைகளை தீயிட்டுக் கொழுத்தி சகஜீவிகள் நாம் சமுதாய அநீதிகளை தட்டிக் கேட்க வேண்டும். மனிதத்தை மதிக்காதவரை இனங்கண்டு முகத்திரையைக் கிழித்தெறிய நீங்கள் முன் எழுச்சியுற வேண்டும்." ரேணுஷா கொட்டியது. விழிப்புற்றனர் மாணவிகள்.... சிலநாட்களிலேயே வீழ்ச்சியுற்றது ரேணுஷாதான். ரங்கனின் காதலில்! காதலுக்காய் கரைந்து போனாள். வீட்டில் கிடைத்த அனைத்து ஆக்கினைகளையும் அவனுக்காய் ஏற்றாள். வீடே அதிர்ச்சியுற்றது.

விஜி சொல்லிப் பார்த்தாள். "ரேணு நீ சமூகத்திற்கானவள். உன் சிந்தனை, பகுத்தறிவு ஒரு பாசறையைத் தோற்றச் செய்யும் வல்லமையுண்டு. நீ வித்தியாசமானவள். ஒரு சுதந்திரமற்ற ஒரு சுகமான சுமையைச் சுமக்காதே. உன்னை நான் வேறு விதமாகப் பார்க்கின்றேன். காதல் வேணும். அது உன்னை உன்முழுமையிலிருந்து திருப்புவதை என்னால் உணரமுடிகிறது. வாழ்க்கையில் ஒருபகுதிதான் காதல். அது முழுமையல்ல உன் போன்றவளுக்கு."

ஆமாமென ரேணு கேட்பாள். அழுவாள். பிறகு ரங்கனை ஒருதடவை சந்தித்த பின் மாறியிருப்பாள். அந்நேரமிலிருந்து அவளை மீட்பதில் விஜி தோற்றுநின்றாள். இன்னுமொரு இடி விஜிக்குக் காத்திருந்தது.

ரங்கன் பல்கலைக்கழகத் தேர்வில் தோற்றுப்போக, அதில் தேறிய ரேணுவும் பட்டப் படிப்புக்குப் போகவில்லை. விஜி விடவில்லை. "உன் காதலுக்கு ஒன்றும் வராது கண்ணே. உன் படிப்பிற்கும் காதலுக்கும் சம்பந்தமில்லை. உன்னைத் தெரியும் ரங்கனுக்கு. நீ போ. பிறகு கவலைப்படுவாய்" என்ற பேச்சும் அர்த்தமற்றுப் போனது. விஜிக்கு அப்போதெல்லாம் காதல் மேல் வெறுப்பு ஏற்பட்டது. விஜியின் இந்தத் தலையீடு ரங்கனுக்குப் பெருத்த தலையிடியாயிற்று. "விஜிக்கு லவ் பற்றித் தெரியாது. அவள் ஒரு வைரம். உன்னைக் குழப்புவது எனக்குப் பிடிக்கவில்லை" என்றதோடு விஜி விலகிப் போனாள்.

ரங்கன் ரேணு திருமணம் நடந்தது. ரங்கன் கொஞ்சக்காலம் அவ்வூரிலே வேலை பார்த்ததாகவும் பின்பு தன் நண்பர் உதவியோடு நியூஸிலாந்து போய்விட்டதாகவும் அறிந்தாள் விஜி.

எந்தவிதத்திலோ விஜியின் இருக்கையறிந்த ரேணு அவளுடைய தொடர்பைப் புதுப்பித்தாள். கடிதங்கள் பாலமானது. 'உன்னைப்போல ஒரு சிநேகிதத்தை இழந்தது என் துர்ப்பாக்கியம்' என்பதை கடிதம் சொல்ல ஆரம்பித்தது. அங்கு வந்துபோகும்படி அடிக்கடி கேட்டிருந்தாள்.

விஜியும் குணாவும்போய் அவர்களுள் ஒரு இணைப்பை கொண்டுவர முன்னெடுத்தவை யாவும் பூஜ்ஜியம் தொட்டன.

ரேணுவோடு தீர்வை விட்டுவிட்டு வரும்போது அந்தக் கடைசிநாள் எல்லாத்தையுமே இழந்தவனாய் விஜியை அனுப்பிவைத்தாள் ரேணுஷா.

---

## எழுத்தாள நண்பர்களுக்கு!

அன்புடன்.

பூவரசுக்கான உங்கள் ஆக்கங்கள் அதிகரித்திருக்கின்றன. மகிழ்ச்சி!

புதிய பல படைப்பாளர்கள் ஆக்கங்களை எழுதி விட்டு அவை உடனே வெளிவரவேண்டும் என்று விரும்புகிறார்கள்.

வராதபட்சத்தில் எழுதுவதை நிறுத்திவிடுகிறார்கள்.

பூவரசுக்கு வந்துசேரும் ஆக்கங்கள் உடனுக்குடன் வெளிவராவிட்டாலும் காலக்கிரமத்தில் அவற்றை வெளியிட ஆவன செய்துவருகிறோம். எனவே எழுதுவதை நிறுத்தாதீர்கள்.

பூவரசு உங்களுக்காகவே உருவானது.

அது ஒருபோதும் உங்கள் படைப்புக்களை அலட்சியம் செய்யாது.

எனவே எழுதுங்கள்! எழுதுங்கள்! எழுதுங்கள்!

அன்புடன்
இந்துமகேஷ்

---



விஜி யேர்மனி வந்து மூன்று மாதமோடிவிட்டன.

அன்றுகாலை வந்த தொலைபேசிக்காய் அவள் மெல்ல நகர்ந்தாள்.

குணா அவளருகேதான் அதையும் வைத்துவிட்டுப் போயிருந்தான். சிலவேளை குணா எடுப்பது வழக்கம். சிலவேளை வெருட்டுவதும் வழக்கம்.

'போனை'த் தூக்கி 'மைக்'கை அழுத்தினாள்.

"ஹலோ அம்மா! நானு பாரதி ரேணுவின் மகன்."

அவன் ரேணுவை மம்மியென்றும் விஜியை அம்மாவென்றும் அழைப்பது வழக்கம்.

"ஓ பாரதி.... மம்மி பேசணுமாம்."

முதல் சுகம் கேட்டாள். கவனமாயிருக்க வேணும் என்றாள்.

"விஜி! ரங்கனை இலங்கைக்கு அனுப்பிவிட்டார்கள்."

"என்னது..."

"ஆம்.... பாரதி இங்கு பலமுறை முறையிட்டிருக்கிறான். எமக்குத் தெரியாமலே தன் ஆசிரியைகளிடமும் பொலிசாரிடமும். அவர்கள் விசாரணைக்கு அழைத்து... ரங்கனை பிரிந்து வாழும்படி ஒருவருடம் கேட்டதால் ரங்கன் தான் ஒத்துவருவதாக வந்து மீண்டும் குழப்பம் செய்ததால்.... பாரதி திருப்பியும் முறையிட்டதால் உடனே இலங்கைக்குப் போகுமாறு அனுப்பிவிட்டார்கள். இங்கைய சட்டமிது. இனி நான் நானாக வாழப் பார்க்கின்றேன். அடுத்த விடுமுறைக்கு குணாவோடு வா. சரியா... மிகுதி கடிதம் எழுதிறன்.."

விஜிக்குத் தலை சுற்றியது.

இளம்தலைமுறையின் தார்மீகப் பொறுப்பு பாரதியின் வடிவில்.... இந்தத் தீர்வு பாரதியால் எழுதப்பட்டது ஒரு திருப்தியைத் தந்ததுபோன்ற உணர்வு....

குணா எப்போது வருவான் என்று இன்று முழுமையாய் எதிர்பார்த்தாள் விஜி. முன்னொருமுறை கல்லூரியில் ரேணுஷாவுக்கு விஜி எழுதிய அந்த வடிவம் நினைப்பில் வந்தது...

குரங்கன் கொள்ளையடித்த சேதி.... உடனே ரேணுஷா "கு" அழித்துவிட்டாள். விஜியின் கையில் ஓரடியும் விழுந்தது.

இன்று திருப்பி அதை அவளே எழுதியதுபோன்ற நினைப்பில் விஜி உறங்கிப் போனாள்.

□□□

---

**பூவரசம்பூவை இரண்டு நாடுகள்**
**தங்கள் தேசியச் சின்னமாக வைத்திருக்கின்றன.**
**அந்த நாடுகள்:- ஹங்கேரி, ருமேனியா.**
**(தகவல்: சின்னஞ்சிறு கோபு)**

---

# மண்ணும் மனிதரும்

— ஜெயா நடேசன்

'மனிதன்' என்ற சொல்லைப்போல் வலிமையும், அழகும் ஒருங்கே அமைந்த சிறப்பான சொல் வேறொன்றும் இல்லை எனலாம். மனிதன் இயற்கையின் உற்பத்தி. அவன் இயற்கையின் காற்றைச் சுவாசிக்காமல் ஒரு நிமிடம்கூட வாழமுடியாது. இயற்கையிலுள்ள நீரைப் பருகி, உணவைப் பெற்று உண்டு வாழ்கிறான். இயற்கையின் தட்ப வெட்பங்களோடு வாழ நேரிடுகின்றது. இயற்கையின் சீற்றங்களான வெள்ளப்பெருக்கு, பூமிநடுக்கம், சூறாவளி, மரணங்கள் என்பவற்றாலே பாதிப்பு அடைந்தாலும் தன்னை மாற்றி அமைத்து வளர்ந்தான்.

மனிதனின் மற்றொரு தனிச்சிறப்பு உழைப்பு.

மனிதன் ஆற்றங்கரைகளில் நிலையாக வாழத் தொடங்கினான். மண்ணை உழுது தானியத்தைவிதைத்தான்.கூட்டாக உழைத்து கூட்டாக வாழ்ந்தான். யாவரும் சேர்ந்து நிலத்தை உழுது தானியத்தை விதைத்து, காவல் காத்து அறுவடையும் செய்தனர். உணவிற்காகக் கவலை கொள்ளவில்லை. அவர்கள் நிலத்தை மேலும் விரிவாக்கவும், உற்பத்திக் கருவிகளை வளர்த்தெடுக்கவும்,போக்குவரத்துப் பாதைகளை அமைக்கவும், வீடுகளைக் கட்டவும் ஆற்றோரங்களில் ஆடிப்பாடி கலைகளை வளர்க்கவும் நேரத்தை ஒதுக்கி வாழ்ந்தான். இரும்பைக் கண்டதுமே மனிதன் கலப்பையைச் செய்துவிடவில்லை. இரும்புத் துண்டால் நிலத்தை கீறியே தானியத்தை விதைத்தான். ஆழமாகக் கீறின் தானியம் விளையும் என அறிந்தான். காட்டு விலங்குகளைப் பிடித்து பழக்கி வீட்டு மிருகமாக்கினான். முதலில் மனிதனே கலப்பையை இழுத்து மண்ணை உழுது வளமாக்கி பின்னர் மாடுகளைப் பூட்டி உழுதான். கல்லோடு கல்லை உரஞ்சி நெருப்பை உண்டாக்கி, காட்டு விலங்குகளைப் பிடித்து வேட்டையாடி இறைச்சியை வாட்டி உண்டான்.

மற்றது மனிதனைப் பண்படுத்துகின்ற கருவிகளில் ஒன்று மதம். மனிதன்தான் சிலையைச் செய்தான். தனது கைவேலைப்பட்ட சிலைக்கு அவனே அடிமையாகிப் போனான். மனிதன்தான் பணத்தைக் கண்டு பிடித்தான். பணத்தால் வாங்கவும், விற்கவும் அடிமைப்பொருள் ஆனான். மனிதனே இயந்திரத்தைப் படைத்தான். அந்த இயந்திரம் இடம்பெயரச் செய்தது. தனது படைப்பிற்கெல்லாம் அடிமையாகிப் போனதுதான் மனிதனின் வரலாறு. மனிதன் சந்திரனில் காலடி வைத்தான். மண்ணில் இருந்து எழுந்த ஒரு புதிய குரலாக இது ஒலித்துக் கொண்டது.

இயற்கையின் இரகசியங்களை கட்டவிழ்ப்பதில் விஞ்ஞானம் ஆற்றும் பணி மனிதகுலத்தை அறிவுபூர்வமாகவும், ஆன்மீகரீதியாகவும் முன் தள்ளிக்



கொண்டு செல்கின்றது. மண்ணின்று வரும் பொருளாதாரம், ஒரு சமுதாயத்தில் முக்கிய பங்கு அளிக்கின்றது. பாதுகாப்பு, சமூக அந்தஸ்து, சுயநிர்ணயம், மனித மாண்பு இவைகள் மனித உரிமையின் மேல் எழுந்து நிற்கின்றது.

இன்றைய மானிட வாழ்க்கையில் அறியாமை, பணத்தாசை, பொறாமை என்ற மூன்றும் சேர்ந்துவிட்டால் அவ்வளவுதான். உண்மைக் கண்களிலிருந்து மறைப்பதற்கு வேறெதுவும் இல்லை. மனித வாழ்வில் அவனுக்கு வரும் கஸ்டங்களும் துன்பங்களும்தான் அவனைப் பூரண மனிதனாக்குகின்றது. இந்த மானிடன்தான் எம் மண்ணின் அழகைப் பார்த்து எப்படியெல்லாம் வர்ணித்தான். 'பச்சை மேனியுடைய பூமாதேவி' என்றான். பச்சை நிறக் கம்பளம் போர்த்திய பூமகள் என்றான். இப்படிப்பட்ட எமது மண் இன்று குருதி நிறைந்த செம்மண்ணாக மாறிவிட்டது.

அன்று யூதமக்கள் தங்கள் மண்ணிலிருந்து பலதடவைகள் விரட்டியடிக்கப் பட்டு அகதிகளாக, அடிமைகளாக தன்மானமிழந்து வாழ்ந்தார்கள். தம்மின விடுதலைக்காக பாலஸ்தீனர்கள் தமது மண்ணிலிருந்து துரத்தப்பட்டு நாடோடிகளாக்கப்பட்டார்கள். மனிதவரலாற்றில் கிட்லர் படைத்த சரித்திரத்தையும் மறக்க முடியாது. அன்று எமது மண்ணையும் இந்திய அரசர்கள், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் பல நூற்றாண்டுகளாக ஆதிக்கம் செலுத்தியது சரித்திர உண்மை. ஈழப் போராட்ட பின்னணியில் எமது மண்ணில் இந்திய இராணுவம் குவிக்கப்பட்டதும் மக்கள் இம்சிக்கப்பட்டதும், சிறைப்பிடிக்கப்பட்டதும், கொல்லப்பட்டதும் நடைபெற்றுக் கொண்ட கோரக் காட்சிகளாகும்.

மண் அற்றோர் முகம் இழந்து நிற்கிறார்கள், முகவரியின்றி அகதிகளாக அலைகிறார்கள். பிறந்த எமது இனத்தவரின் நிலையும் அதுதான். கலப்பைகள் உழவேண்டிய மண், அதன் மடிமீது சம்மாணம்கொட்டி அளைந்து விளையாடிய மண் குருதி வெள்ளம் மண்ணாகவும் சாம்பல் மேடாகவும் மாறியுள்ளது. மழை மாரி பொழியும் வானிலிருந்து பொம்பர்கள் குண்டுமாரிகள் பொழிகின்றன. மீன்பிடிப் படகுகள் ஓடவேண்டிய கடலில் பீரங்கிப் படகுகள் ஓடுகின்றன. இது எமது தமிழ் இனம் வாழ்ந்த மண்ணின் இன்றைய பரிதாபக் காட்சிகள்.

நாளைய விடியலை நோக்கி வீறுநடைபோடும் தாயக மண்ணின் தமிழரின் புரட்சிதான் என்னே. சிறியவரிலிருந்து முதியவர்வரை போராட்டமே. ஒருவேளை உணவிற்கே அவதியுறும் மக்கள் போராட்டம். கல்விக் கூடங்களும் கைகூப்பிக் கடவுளைக் கும்பிடுவதற்கென்று ஆன்றோர்கள் எழுப்பிய ஆலயங்களும் இடித்து நொறுக்கப்பட்ட நிலையில், மின்சாரம் இல்லாது மண்ணெண்ணைய் விளக்குகளும் மரநிழல்களில் கல்வி கற்கும் மாணவர் கூட்டம். மழையும் வெயிலும் அவர்களின் எதிரிகள். மரங்களின் கீழ் உடுக்கும் துணிகளை மறைவிடமாகக் கட்டி வாழ்க்கை நடாத்தும்

குடும்பங்கள். அங்கே மருத்துவ வசதியின்றி கொடிய நோய்களினால் அவதியுறும் மக்கள். அரசின் அடாவடித்தனத்தால் அங்கவீனமுற்று சாவின் விளிம்பில் போராடிக் கொண்டிருக்கும் அவர்கள் நிலை. பெற்றோர்களை இழந்து தவியாய்த் தவிக்கும் சிறார்களும், பிள்ளைகளை இழந்து தவியாய்த் தவிக்கும் பெற்றோர்களின் குமுறல்கள்.கற்பைப் பறிகொடுத்த இளம்பெண்கள், பாலியல் உறவுப் பச்சிளம் குழந்தைகள், வாலிபர்கள், பெண்கள் காணாமல் போனவை, புதைகுழிகள், மரணங்கள் இப்படியான சூழ்நிலையை தனதாக்கிக் கொண்டு கொடுமையான நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டன. இவை யாவற்றினதும் பிரதிபலிப்பே நாளாந்தம் அகதிமுகாம்களும், அநாதை இல்லங்களும் அதிகரித்தவண்ணம் இருக்கின்றன. 1983ம் ஆண்டு யூலை எமது இனப்படுகொலையின் பின் எட்டு இலட்சம் தமிழ் மக்கள் எம் மண்ணிலிருந்து தம் உயிர்களைக்காக்கும் நோக்குடன் உலக நாடுகளுக்கு அகதிகளாகச் சென்று வாழ்கின்றனர். இவர்கள் தங்கள் மண்ணின் உரிமை வாழ்வை இழந்தார்கள்.உறவினர்களை இழந்தார்கள். தங்கள் சொத்துக்களை இழந்தார்கள். எமது மண்ணைவிட்டு வெளிக்கிட்டவர்களில் பயணத்தில் மாண்டோர் அதிகம் பேர்.

பசுமையும் பண்பாடும், பைந்தமிழ் வாசமுமாக எமது இனம் மகிழ்ந்து துதித்த யாழ் மண்ணில் ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட குடிமக்கள் பிறந்து வளர்ந்தவர்கள்.தாய் மண்ணை நேசித்தவர்கள். பல தலைமுறையாக இந்த மண்ணை தம் வேலையாலும், வியர்வையாலும் பண்படுத்திப் பலனை நாடு முழுவதற்கும் கொடுத்தவர்கள். அழகான வீடுகளாலும், தோட்டங்கள் வயல்களினாலும் தம் தாய்மண்ணை நேசித்தவர்கள். 1995ம் ஆண்டு தம் மண்ணைவிட்டு வன்னிக்கு இடம்பெயர்ந்தமை சரித்திரத்திலே இடம்பெறாத சம்பவமாகும். மறக்க முடியாதது ஒன்றாகும்.

இன்றைய நிலையில் போரினால் களைப்படைந்து வாழ்க்கையின் ஓரங்களில் தவித்துக் கொண்டிருக்கும் எமது இனத்தின் உள்ளத்தின் உணர்வுகளை வென்றெடுக்கும் பொறுப்பை இராணுவத்தினருக்குக் கொடுக்கப்பட்டுள்ளது. இவர்களை மக்களற்ற மண்ணாக ஆக்கிவிடுவதால் ஒரு தனிப்பட்ட இனமே முழுமண்ணிற்கும் உரிமைகோரலாம் என்பது ஆட்சியாளர்களின் உள்நோக்கமாகும். குறிப்பாக மற்ற இனம் தங்களுக்கென வேறு நாடு இல்லை. இதுமட்டும்தான் நாங்கள் வாழும் நாடு. ஆகவே எப்பாடு பட்டாலும், எம் இனத்தை அழித்து இம்மண்ணை எமதாக்குவோம் என்பது இவர்களது நோக்கமாகும்.

எமது மனித இனம் பிறந்து, தவழ்ந்து, புரண்டு, வளர்ந்து மனிதராகிய மண்ணின் பலபகுதிகள் இன்று பாலைவனமாகக் காட்சியளிக்கின்றது. இன்று மக்களற்ற எம்மண் அபயக்குரல் எழுப்புகின்றது. மண்ணுள்ள மக்களாக இருந்தும், மக்களற்ற மண்ணாக மாறியுள்ளது. உண்மைக்கும் நீதிக்கும், உயிர் இழப்பினும் எமது மண்ணிற்காக துணிந்து நின்று குரல் கொடுப்போம். (மூன்றாவது பரிசுபெற்ற கட்டுரை)



# 20ம் நூற்றாண்டு

## -சில முக்கிய நிகழ்வுகள்.

*21ம் நூற்றாண்டில் அடியெடுத்து வைக்கப் போகும் தருணத்தில் 20ம் நூற்றாண்டில் இடம்பெற்ற அரசியல் சமுதாய மாற்றங்களைப்பற்றியும்,விஞ்ஞானத்தின் வளர்ச்சி பற்றியும் நினைவு கூருமுகமாக இத்தொடரை ஆரம்பிக்கிறோம்.*

*1900ஆண்டு முதல் 1999ம் ஆண்டுஇறுதிவரை நடைபெற்ற, நடைபெறும் நிகழ்வுகளை உள்ளடக்கியதாக இத்தொடர் 12 அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது.*

*10 ஆண்டுகாலப் பகுதியை ஒரு அத்தியாயம் கொண்டதாக இருக்கும். 1900 ஆண்டுக்குப் பின் ஏற்பட்ட நிகழ்வுகள் விரிவாக 3 அத்தியாயங்களில் தரப்படும்.*

*1900ம் ஆண்டுமுதல் 1910 வரை முதலாவது அத்தியாயம்,1911முதல் 1920வரை இரண்டாவது அத்தியாயம் என இவ்வாறு 1990வரை ஒன்பது அத்தியாயங்களும், 1990ம் ஆண்டுமுதல் 1999 வரை 10வது 11வது 12வது அத்தியாயங்களும் எனும் வரிசைப்படி இத்தொடர் அமையும்.*

**-எஸ். கந்தசாமி**

## முதலாவது அத்தியாயம்.
**(1900முதல் 1910ம் ஆண்டுவரை)**

20ம் நூற்றாண்டு ஆரம்பமானபோது ஐரோப்பா பெரியஆயுதத் தொழிற்சாலையாகவே விளங்கியது. இரு பழைய எதிரிகளான பிரிட்டனும் பிரான்சும் பலமடைந்துகொண்டிருந்த ஜேர்மனிக்கு எதிராக இணைந்து செயற்பட்டன. ரஷ்யாவிலும் சீனாவிலும் புரட்சிக்கான அறிகுறிகள் தோன்றலாயின. அமெரிக்காவோ வெளிநாடுகளின் பிரச்சினைகளில் இருந்து ஒதுங்கி மெக்சிக்கோ, பனாமா, தென் அமெரிக்கா போன்ற அண்டைய நாடுகளில் கவனம் செலுத்தியது.
பல்வேறு இயற்கை வளங்களைக் கொண்டு அமெரிக்கா உலகின் மிகுந்த செல்வமிக்க நாடாக வளர்ச்சி பெற்றது.
ஆகாயவிமானம் கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து பிரயாணத்தில் வளர்ச்சிமட்டுமின்றி யுத்த முனையிலும் பாரியமாற்றங்கள் ஏற்பட்டன. இனி 1900ம் ஆண்டுக்கும் 1910ம் ஆண்டுக்குமிடை நடைபெற்ற சிலமுக்கிய நிகழ்வுகளைப் பார்ப்போம்:

1900-

☐ அமெரிக்காவின் 25வது ஜனாதிபதியாக வில்லியம் மைக்கின்லே மீண்டும் தெரிவானார்.
☐ அவுஸ்திரேலிய பொதுவமைப்பு உருவாக்கப்பட்டது.

1901

☐ அவுஸ்திரேலிய பொதுநலவமைப்பின் முதலாவது பிரமத மந்திரியாக எட்மண்ட் பாட்டன் தெரிவு செய்யப்பட்டார்.
☐ அமெரிக்க ஜனாதிபதி மைக்கின்லே கொலைசெய்யப்பட்டதை யடுத்து தியோடோர் றூஸ்வெல்ட் ஜனாதிபதியாகத் தெரிவானார்.



(தொடர்ச்சி 36ம் பக்கம்)



# தியாகத்தின் பாதையிலே.....

அறிமுக எழுத்தாளர்:
**இணுவையூர்**
**கு.விக்கினேஸ்வரன்**

*1.*



*அந்தக் கிராமத்தின் மத்தியிலே வானளாவிய கோபுரத்துடன் காட்சியளிக்கும் பிள்ளையார் கோயிலில் வருடாந்த உற்சவத் திருவிழா தொடங்கியதில் இருந்து அந்தக் கிராமமே களைகட்டத் தொடங்கியிருந்தது.*
*அதுவும் அன்று கைலாசவாகனத் திருவிழா.*
*வெள்ளை வேட்டிகளும் வண்ண வண்ணப் புடவைகளுமாக மக்கள் கூட்டம் கோயில் வீதி எங்கும் திரண்டிருந்தது.*
*கோயில் பூசை ஆரம்பமாவதற்கு அறிகுறியாக மணிக் கூண்டுக் கோபுரத்தின் கண்டாமணி இனிய ஓசையால் "டாங்..டாங்..." என்று ஊரையே நிறைத்தது.*
*"அம்மா... ஆயத்தமணிகேட்குது... நான் கோயிலுக்குப் போயிற்றுவாறன்" என்ற செந்தூரன் தாயின் பதிலை எதிர்பாராமல் வெளிப்படலையைத் திறந்துகொண்டு கோயிலுக்கு விரைந்தான்.*

பெயரைப் போலவே செந்தூரனும் நல்ல சிவலை நிறம்.

இவனுடைய அப்பா கணபதி கொஞ்சம் நிறம் குறைவு என்றாலும் இவன் தாயைப் போலவே நல்ல அழகானவன்.

அவன் கோயிலுக்குள் பிரவேசிக்கவும். பூசை தொடங்கவும் நேரம் சரியாக இருந்தது.

நேரே சென்று மூலஸ்தான பிள்ளையாரை வணங்கிவிட்டு வாகனசாலையை நோக்கிச் சென்றான் செந்தூரன்.

அங்கே இவன் வயதை ஒத்த நண்பர்கள் வசந்தன்,சிவா,ரூபன்,தீபன் எல்லோரும் யானை வாகனத்துக்கு கொம்புகட்டிக்கொண்டு இருந்தனர்.

இவனைக் கண்டவுடன்

"டேய்...செந்து ஏன் வெள்ளண வாறாய்...திருவிழா முடிந்தவுடன் புக்கை சாப்பிட்ட வராதையன்"என்ற வசந்தனைப் பார்த்து,

"உனக்கு இந்த நக்கலுக்கு குறைவில்லை...அது சரி ஏன் இண்டைக்கு யானை வாகனத்தைக் கட்டுறியள்...இண்டைக்கு எலி வாகனமெல்லே காவுறது?"

"என்னவோ தெரியேல..நாங்களும் எலியைத்தான் தூக்கினனாங்கள்.. ஆனால் எங்கடை கொதிக்குருக்கள் வந்து...அதுதான் பிரதம குருக்களின்ரை மகன் மகேஸ்சர்மா யானையைக் கட்டுங்கோ என்றுட்டுப் போறான். இவன் சரிவரான்...குருக்கள் எவ்வளவு தங்கமான மனுசன்... அந்தாளுக்கு இப்பிடி ஒரு பிள்ளை...சரிசரி நேரமாச்சுது..வாகனத்தைத் தூக்குங்கோ...முன்னுக்குக் கொண்டே வைப்பம்!"என்றான் வசந்தன்.

"மச்சான் வசந்தன்...திருவிழா முடிஞ்ச உடனை வீட்டுக்குப் போயிடாதை..உன்னோடை தனிய கொஞ்சம் கதைக்கவேணும்!" என்றான் செந்தூரன்.

இவனுக்கு விபரம் தெரிந்த நாளில் இருந்தே வசந்தன்தான் இவனுக்கு உயிர் நண்பன். சிறு வயதிலே விளையாடுவது என்றால்கூட இருவரும் ஒருபக்கம்தான் நிற்பார்கள். ஏன் பாடசாலை வகுப்பிலும் சரி ரியூசனிலும் சரி அருகருகில் உள்ள ஆசனங்களில் தான் இருப்பார்கள்.

இந்த நட்புக்குரிய மகிமைதானோ என்னவோ இவனுக்கு ஒரு சின்ன பிரச்சினை என்றாலும் அதை வசந்தனுக்குத்தான் சொல்லுவான்.

அவனுக்கு ஏதேனும் பிரச்சினை என்றாலும் முதல் சொல்லுவது செந்தூரனுக்காகத்தான் இருக்கும்.

'திருவிழா முடிஞ்சுது.. என்னை நிற்கச் சொன்ன செந்துவைக் காணேல்லை...!' என்று எண்ணிய வசந்தன்

"டேய்...சிவா..செந்துவைக் கண்டனியே...?"

"இல்லை மச்சான் என்ன விசயம்?"

"ஒன்றும் இல்லை...அவனைக் காணவில்லையே என்று கேட்டனான்!"

"ஏதோ இரண்டுபேரும் புருசன் பெண்டாட்டி மாதிரித் திரியிறியள்...எல்லாம் ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்...அவன் தேர்முட்டியடியிலை இருந்து




(தொடர்ச்சி 43ம் பக்கம்)

எங்கள்

# இளந்தளிர்கள்

ஆடி ஆவணி 1998



'ஔவைச் செல்வன்'
கஜிநாத் தவம்

நாம் வாழத் தமிழ் வாழும். தமிழ் வாழ நாம் வாழ்வோம்.

இளையோர்க்கான
பிரத்தியேக இணைப்பு

பூவரசு

இந்த இதழில்
தம்பி கஜிநாத் தவம் தன்னைப் பற்றிச்சொல்கிறார்.

.......................................................................................................................

எனது பெயர் கஜிநாத் தவம்.
நான் ஈழமணித்திருநாட்டில் யாழ்ப்பாணத்து அனலைதீவு என்னும் கிராமத்தில் பிறந்தேன்.
நாட்டின் சூழல் காரணமாக எனது பெற்றோருடன் இடம்பெயர்ந்து இந்தியாவில் தமிழ்நாட்டில் வாழ்ந்து வந்தேன்.
அங்கே அருட்திரு.அபிராமசுந்தரி அமிர்தானந்தமஜி அம்மையாரின் ஆசியுடன் ஏடு தொடக்கப்பட்டு சென்னையில் போரூரில் எனது ஆரம்பக் கல்வியைத் தொடர்ந்தேன். அப்பாடசாலையில் நடைபெற்ற வாணிவிழாவில் மூன்று வயதினிலே "கலைவாணி அருள்வாயம்மா!" எனும் பக்திப்பாடலையும், குழு நடனமுமாடி கிராமத்தலைவரின் பாராட்டையும் பரிசையும்பெற்றேன்.
பின்னர் சுவிற்சர்லாந்து நாட்டில் சூரிச் மாநகரில் 23.10.1994ல் சைவத்தமிழ்ச் சங்கத்தினால் நடாத்தப்பட்ட கலைவாணிவிழாவில் ஆத்திசூடி மனனப் போட்டியில் சிறப்பாகப் பேசியதற்காக பிரதம விருந்தினராக கலந்துகொண்ட ஆத்மீக வள்ளல் ஆத்மஜோதி சித்தாந்த வித்தகர் நா.முத்தையா அவர்களால் 'ஔவைச் செல்வன்' எனும் பட்டம் வழங்கப்பட்டு பாராட்டுப் பெற்றேன்.
பின்னர் 1995ம்ஆண்டு தமிழருவியின்ஆண்டுவிழாவில் ஔவையார் பற்றிப் பேசியபோது பலராலும் பாராட்டப்பட்டு பரிசு வழங்கிக் கௌரவிக்கப்பட்டேன். 06.01.1996ம் ஆண்டு பார்கைம் தமிழர் ஒன்றியத்தினால்நடாத்தப்பட்ட ஆண்டுவிழாவில் தமிழ்மொழிபற்றிப் பேசி சிறந்த பேச்சாளனாகத் தெரிவு செய்யப்பட்டேன்.
அத்துடன் மேடையில் நாகநர்த்தன நடனமாடி பலராலும் பாராட்டப்பட்டேன்.
அதன்பின்பு என்னப்பெற்றாலில் நடைபெற்ற எஸ்.கே.மகேந்திரன் அவர்களின் நினைவாஞ்சலி விழாவில் பேசியபோது ஈழநாடு பத்திரிகை ஆசிரியர் எஸ்.எஸ்.குகநாதன் அவர்களால் பாராட்டப்பட்டு பரிசும்பெற்றேன்.அடுத்து பிறேமன்நகரில் இலண்டன் குளோபல் இன்வெஸ்ட்டின் நிறுவனத்தாரால் நடாத்தப்பட்ட கலைமாலைப்பொழுது 96 பேச்சுப்போட்டியில் சிறுதுளி பெருவெள்ளம்என்ற தலைப்பில்பேசி அதிகப்படியானபுள்ளிகளைப் பெற்று முதலாவது இடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தையும்




சிறப்புப்பரிசாக துவிச்சக்கரவண்டியையும்பெற்றேன்.
உலகத்தமிழர் இயக்க கல்விப்பணியினால் நடாத்தப்பட்ட தமிழ்த் திறன் போட்டிகளில் 1996ம் ஆண்டு ஜேர்மனி ரீதியில் 6-7 வயதினருக்கான பேச்சுப் போட்டியில் 2ம் இடத்தையும்,1997ம் ஆண்டு ஜேர்மனிரீதியில் 7-8வயதினருக்கான பேச்சுப் போட்டியில் உழவர் திருநாள்பற்றிப்பேசி முதலாம் இடத்தையும் பெற்றேன்.
பாடசாலையினால் ஒழுங்குசெய்யப்பட்ட ஆண்டுவிழா நிகழ்ச்சி களிலும் நவராத்திரிவிழாக்களிலும் உழவர் திருநாள் விழாக் களிலும் மேடை நிகழ்ச்சிகளில் பேசிவருகின்றேன்.

மாவீரர்கள் வரிசையில் திலீபனின் நினைவுதினப் பேச்சுப் போட்டியில் கலந்துகொண்டு 28.09.96ல் 3வது இடத்தையும், கேணல் கிட்டுவின்நினைவாகப் பேசி 2வது இடத்தையும் எரிந்த குஞ்சுகள் மேடைநாடகத்தில் நடித்தும் உள்ளேன்.1996ம் ஆண்டு ஐப்பசிமாதம் 23ம்திகதி 11மணியளவில் சன்றைஸ் தொலைக் காட்சி சேவையில் சரஸ்வதி பூஜைபற்றிப் பேசி தொலைக்காட்சி நிறுவனத்தாரிடமிருந்தும் நேயர்களிடமிருந்தும் பாராட்டுப்பெற்றேன்.
இம்மண்ணில் தமிழ் இலக்கிய சஞ்சிகைகளில் வெளிவரும் சிறுகதை, கட்டுரை, வர்ணம் தீட்டுதல், ஓவியம், பொது அறிவுப் போட்டிகளிலும்,ஈழநாடு, ஈழமுரசு பத்திரிகைகளின் போட்டிகளிலும் கலந்து பரிசில்களையும் பெற்றுள்ளேன். மண் சஞ்சிகையின் 7ம் 8ம் ஆண்டுவிழா ஓவியப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்று ஆசிரியரின் பாராட்டையும் பெற்றுக் கொண்டேன்.
☐
(தம்பி கஜிநாத் தவம் மேன்மேலும் கல்வியிலும் கலைகளிலும் சிறந்து வளர நாமும் வாழ்த்துகிறோம் — ஆசிரியர்)
☐

.......................................................................................................................


அன்பான தம்பி தங்கைகளே!
உங்கள் திறமைகளைப் பற்றி அல்லது உங்கள் ஆர்வத்தைப்பற்றி நீங்களும் எழுதி அனுப்பலாம்.
உங்கள் திறமைகள் குடத்தினுள் இருக்கும் விளக்குப்போல் அல்லாமல் குன்றிலிட்ட தீபம் போல் பிரகாசிக்கட்டும்.
உங்களைப்பற்றிய விபரங்களை அனுப்பும்போது கூடவே உங்களது புகைப்படம் ஒன்றும் இணைத்து அனுப்புங்கள்!
ஆசிரியர்.

இந்தப் போட்டிகளுக்கான உங்கள் விடைகள் வந்துசேர வேண்டிய முடிவு திகதி: 15.08.1998.




**போட்டி எண்: 1**

இங்குள்ள சிங்கங்களில் இரண்டு சிங்கங்கள்மட்டும் ஒரே மாதிரியானவை. அவை எவை?










**போட்டி எண்: 2**

இங்குள்ள கட்டங்களில் 3 தொடக்கம் 18 வரையிலான இலக்கங்களை நீங்கள் இடவேண்டும். ஆனால் கூட்டுத்தொகை படத்தில் உள்ளதுபோல் எப்பக்கத்திலும் 42 ஆக இருத்தல் வேண்டும்.

**போட்டி எண்: 3.**

எண்களை இணைத்து மறைந்திருப்பதைக் கண்டுபிடியுங்கள்.



# மானும் நரியும்.

அந்திமாலை நேரம். ஆற்றங்கரையோரம். கலைமான் ஒன்று தண்ணீர் குடிக்க வந்தது. ஆற்றில் தண்ணீர் குடித்தது. தாகம் தீர்ந்தது. அது தனது நிழலைத் தண்ணீருக்குள் கண்டது.
கொம்பின் நிழலைப்பார்த்து 'ஆகா! எனது கொம்பு மிகவும் அழகானது' எனப் புகழ்ந்தது.
'கால்கள் சுள்ளிபோல இருக்கிறதே' என்று மனம் நொந்தது.
கரையின் ஓரம் மேலே வந்தது.
அப்பொழுது அந்த மானை ஒரு நாய் கண்டது. அதைப் பிடித்துத் தின்பதற்காகத் துரத்தியது.
மான் வெகுவேகமாக ஓடிக் காட்டுக்குள் நுழைந்தது. பாவம்! நுழையும்பொழுது அதன் கொம்புகள் காட்டுச் செடிகளிற் படர்ந்திருந்த கொடிகளிற் சிக்கிக் கொண்டன. ஓடித்தப்ப முடிய வில்லை. நாய் பிடித்துக்கொண்டது.
'இகழ்ந்த காலே காடுவரையும் கொண்டுவந்துசேர்த்தது. கொம்பே என் உயிரைப் பறிக்கிறது' என்று மான் மனம் வருந்தியது.
நாய் மானைக் கொன்று தின்றது.

'வலியாரைப் புகழாதே!
எளியாரை இகழாதே!'

— சிவஞ்ஜீவ் சிவராம்.







# வளத்தைப் பேணல்

என்றும் உதவும் இயற்கை வளங்களை
நன்றி உணர்வுடன் காத்தல் நம்கடன்.

அருகும் வளத்தை அறிந்து பேணலும்
பெருகும் வளத்தைப் பெருக்கலும் வேண்டும்

பெருங்கா யத்தைப் பேணப் பிழைப்பார்
வருங்கா லத்து மக்களை நினையார்

இருப்பதை நாமே எடுத்து முடித்தால்
உருப்படி யாமோ நாளைய உலகம்

வசதிக ளுக்கு வரையறை யில்லை
வசதியை வழங்கும் வளங்களுக் குண்டு

பரந்து வளத்தைப் பொறுப்புடன் நுகரின்
இரந்து செல்லும் இழிநிலை இல்லை.

வளத்தை வளத்தால் வளர்க்கும்நாடு
வளைத்திவ் வுலகை வரிக்கும் நாடு.

––மதுரகவி வி.கந்தவனம்.

வைகாசி ஆனி 1998
எங்கள் இளந்தளிர்களில் வெளியான போட்டிகளுக்கான விடைகள்

**போட்டி எண்: 1**
மறைந்திருக்கும் விலங்குகள் 9
-முயல்,எலி,கிளி,காளை(மாடு), நரி, ஆடு,மரங்கொத்தி(பறவை), மீன்கள்(2)-

**போட்டி எண்: 2**
கிளையின் சரியான நிழல் C

**போட்டி எண்: 3**

```
 1   1   1
 8̸   3   8̸
 7̸   7   7̸
 9   9̸   9̸
------------------
1   1   1   1
```

**போட்டி எண்: 4**
ஓரோமாதிரிப் பூனைகள் 2-6

**போட்டி எண்: 5**
கரடி.

அதிகம் சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்கள் —

1. செல்வன் திருகஜமுகன் நடராஜா
2. செல்வன் கஜிநாத் தவம்
3. செல்வி தயாளினி நடராஜா
4. செல்வி ஆன் வினோலினி நடேசன்
5. செல்வி ஜெயகௌரி செந்தில்வாசன்
6. செல்வன் டர்சன் செந்தில்வாசன்
7. செல்வி கஜனி தேவராஜா
8. செல்வன் சிவஞ்ஜீவ் சிவராம்

பரிசு பெறுபவர்
செல்வி ஜெயகௌரி செந்தில்வாசன்

**அடுத்த இதழில்....**

பூவரசு
8வதுஆண்டு நிறைவையொட்டி
எங்கள் இளந்தளிர்களுக்கிடையே
நடாத்தப்படும்
சிறப்புப் போட்டிகள்பற்றிய
விபரங்களும்
விண்ணப்பப்பத்திரங்களும்
வெளியாகின்றன.





# தமிழ் எழுத்துக்களின் வரிசை அமைப்பு.

தமிழ், உலகத்தில் உள்ள எல்லாமொழிகளிலும் மிகச் சிறந்தமொழி என்பதில் அவற்றில் உள்ள சொல்.பொருள் வளத்தைக் கொண்டு அறியலாம் என்று தமிழ் அறிஞர் கி.ஆ.பெ. விசுவநாதம் பல எடுத்துக் காட்டுக்களைக் காட்டியிருக்கின்றார்.

தமிழ் எழுத்துக்களின் வரிசை அமைப்பைப் பார்த்தால் மிகவும் ஆச்சரியமாக உள்ளது. தமிழ் மொழியின் எழுத்துக்களின் வரிசை அமைப்பில் இன எழுத்துக்கள் அமைந்திருப்பது தமிழ்மொழிக்கிருக்கும் சிறப்புக்களில் முக்கியமானதாகச் சொல்லலாம். இனம் என்றால் ஜோடி என்றும் பொருள் அதாவது சேர்ந்திருத்தல். தமிழ் மொழியில் உள்ள மெய்யெழுத்துக்கள் பதினெட்டில் பல ஜோடி எழுத்துக்கள் இருப்பதைக் காணலாம். மெய்யெழுத்துக்கள் பதினெட்டாவன — மெய் (புள்ளி) நீக்கப்பட்டவை.

கங சஞ டண தந பம யர லவ ளழ றன.— இவற்றில் கங சஞ டண தந பம றன என்பன இணைபிரியாத ஜோடி எழுத்துக்களாகும். அதாவது 'ங்' என்ற மெய்யெழுத்தை அடுத்து 'க்' என்ற அதன் இனமான க, கா, கெ, கே என்பன போன்றவைதான் வரும்.

எடுத்துக்காட்டு— சங்கு, பங்கம், நங்கூரம். இதுபோலவே 'ஞ்' என்ற மெய்யெழுத்தின் பின் 'ச்' என்ற இனத்தின் எழுத்துக்களே வரும். கஞ்சம், நஞ்சு, வஞ்சி, அஞ்சலை. இதுபோலவே —

'ண்' என்ற எழுத்தின் பின் 'ட்' என்ற இனத்தின் எழுத்துக்களும், 'ந்' என்ற எழுத்தின் பின் 'த்' என்ற இனத்தின் எழுத்துக்களும், 'ம்' என்ற எழுத்தின் பின் 'ப்' என்ற இனத்தின் எழுத்துக்களும், 'ன்' என்ற எழுத்தின் பின் 'ற்' என்ற இனத்தின் எழுத்துக்களும் வரும். இதில் எந்த ஒரு மாற்றமும் கிடையாது. இவ்வளவு வரையறுத்து எந்தமொழியிலும் நிச்சயமாக அமைத்து இருக்கமுடியாது. இந்த எழுத்துக்களின் வரிசையமைப்பில் நமக்கு மிகவும் உதவியாக இருப்பது டண்ணகரமும், றன்னகரமும்தான். அதாவது மூன்று சுழி 'ண்' ஐ டண்ணகரம் என்றும் இரண்டு சுழி 'ன்' ஐ றன்னகரம் என்றும் சொல்கிறோம். இந்த இரண்டு இன எழுத்துக்களைமட்டும் தெளிவாகத் தெரிந்து கொண்டாலே எந்த 'ன்' போடவேண்டும் என்ற பெரும் சந்தேகம் குறைந்து போய்விடும். அதாவது ட வின் முன் 'ண்' என்பதையும், ற வந்தால்அதன்முன்பு 'ன்' போடவேண்டும் என்பதையும் அறிந்துகொண்டால் எழுத்துப் பிழை வெகுவாகக் குறைந்துவிடும் அல்லவா?

— செந்தமிழ்க்கிழார்.

(24ம் பக்கத் தொடர்ச்சி)

□ மார்க்கோனி வானொலி செய்திகளை கோன்வோல் எனும் இடத்திலிருந்து நியூபவுண்ட்லாண்ட் எனும் இடத்துக்கு முதன்முதலாக ஒலிபரப்பினார்.
□ முதலாவது மேர்சிடெஸ் கார் உருவாக்கப்பட்டது.
□ பிரிட்டனின் முதலாவது நீர்மூழ்கிக்கப்பல் சேவையில் ஈடுபடுத்தப்பட்டது.

1903

□ றைற் சகோதரர்கள் ஆகாய விமானத்தைக் கண்டுபிடித்தனர். 1903ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17ம் திகதி வில்பர்றைற், ஓர்வில் றைற் சகோதரர்கள் வீட்டிலேயே தயாரிக்கப்பட்ட விமானத்தை விண்ணில் செலுத்தி சரித்திரம் படைத்தனர்.
இச்சாதனை அமெரிக்காவில் உள்ள வட கரோரினாவில் இடம் பெற்றது. 6பேர்மட்டுமே கண்டுகளித்த இச்சாதனையின் போது 37 நிமிடம்மட்டுமே ஓர்வில் றைற் விமானத்தைச் செலுத்தினார்.

1904

□ ரஷ்யாவுக்கும் ஜப்பானுக்கும் இடையே பெப்பரவரி மாதம் யுத்தம் ஆரம்பமானது. 1905ல் முடிவுற்ற இந்த யுத்தத்தில் ஜப்பான் வெற்றிபெற்றது.

1905

□ சுவீடனில் இருந்து பிரிந்து செல்வதென்று நோர்வேயின் பாராளுமன்றத்தில் முடிவு செய்யப்பட்டது.
□ ரஷ்யப் புரட்சி தோல்வியடைந்தது.

1906

□ அமெரிக்கப் படைகள் கியூபாவை ஆக்கிரமித்தன. பெண்கள் இரவுநேரங்களில் வேலை செய்வதுசர்வதேச ரீதியாகத் தடை செய்யப்பட்டது.
□ இத்தாலிக்கும் சுவிற்சர்லாந்துக்கும் இடையே 12.5மைல்நீளமான சிம்ப்லோன் எனும் சுரங்கப்பாதை திறந்துவைக்கப்பட்டது.
□ சான்பிரான்ஸ்சிஸ்கோவில் ஏற்பட்ட பூமியதிர்ச்சியின்போது 700பேர்வரை கொல்லப்பட்டனர்.
□ பெல்ஜிய அரசாங்கம் காங்கோநாட்டைத் தனது காலனி ஆதிக்கத்தின்கீழ் கொண்டுவந்தது.



1907

□ ஜப்பானியர்கள் அமெரிக்காவில் குடியேறுவதை அமெரிக்க ஜனாதிபதி தியோடோறூஸ்வெல்ட் தடைசெய்தார்.
□ அமெரிக்காவின் 46வது மாநிலமாக ஒக்லகோமா இணைக்கப்பட்டது.

1908

□ சிசிலி நாட்டில் ஏற்பட்ட பூமியதிர்ச்சியின்போது 150,000பேர்வரை கொல்லப்பட்டனர்.


1909

□ முதன் முறையாக ஜேர்மன் பல்கலைக் கழகங்களில்பெண்கள் அனுமதிக்கப்பட்டனர்.

1910

□ ஜப்பான் கொரியாவைத் தன்னுடன் இணைத்துக்கொண்டது.
□ போர்த்துக்கல்லில் புரட்சி ஏற்பட்டது. போர்த்துக்கல் மன்னர் லண்டனுக்குத் தப்பி ஓடினார்.போர்த்துக்கல் குடியரசானது.
□ சீனாவில் அடிமை முறை ஒழிக்கப்பட்டது.
□ மெக்சிக்கோவில் புரட்சி ஆரம்பமானது.
□ தென் ஆபிரிக்கா சுதந்திரக் குடியரசானது.

(தொடரும்)



நதியும், உறுதியான மனிதனும் தங்கள்
வளர்ச்சிப் பாதையை தாங்களே
உருவாக்கிக்கொள்கிறார்கள்
-ஒரு ஆங்கிலப் பழமொழி.

# தேன்மலரும் தேனியும்.

-ப. இராஜகாந்தன்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

தேனியும் தேன்மலரும் உரையாடலைத் தொடர்ந்தன —
காதலுக்குக் காணிக்கையாய்
காதலர் கைமாறும் வேளையிலே?
காமன் தன் வில்லம்பு
கனதூரம் செல்லாது
கருத்தரிக்கக் காத்திருக்கும்
எனைக்கொண்டு அவர்
தம் கருத்தைத் தெரிவிக்கின்றார் — பின்
ஊடல் வரும் வேளையிலே
ஒதுக்கி வைக்கின்றார்.

பொருளோடு புகழ் சேர்க்கும் பெரும்பாவ அரசியலில்
அவர் அணி மாலையாகி அலங்காரம் செய்கையிலே?
அவமானம் தாங்காமல்
அழுகை பெருகிவரும்
பொய்யர்கள் இவர் மேனி
பொசுக்கிவிடும் பெரு நெருப்பு
பொருந்தாத இடத்தில்
இருந்தென்ன லாபமென்று உடன்
உடல்கருகி வாடிடுவேன்.

வாசனைத் திரவியமாய் வசந்தம் பரப்பையிலே
வனிதையர் உமைத் தினம் பூசி மகிழ்கையிலே...?
விதைத்தவர் வளர்த்தவர் விற்கின்றார்
வாங்கிய வர்த்தகர் எனை
அரைத்துக் குழம்பாக்கி
பணத்தைச் சேர்க்கின்றார்
இயற்கை மணம் பரப்பும் என்
வாழ்வைக் கெடுக்கின்றார்
பலன் கருதாது பரவசம்
கொடுக்கின்றோம் நாம்
பணம் கருதிப் பறிக்கின்றார்
அவ ரெம்மை!





பூஜைக்கென்றுபறித்த மலர்
பூசாரியின் கையில் இருக்கையிலே?
இன்னொருவர் நேர்த்திக்காய்
இவரெம்மைப் பறிக்கின்றார்.
கருத்தென்ன சொல்வேனிதற்கு
விரிந்த மலர் விதையாகி விழவேண்டும்
இதுவே அவன் நோக்கம்
இயற்கையெங்கும் இறைவனைக்
காண்பவள் நானாகும்

வீட்டுத் தோட்டத்திலே விரிந்து பூத்திருக்கையிலே?
விதையாகி விழவேண்டிக் காத்திருக்கும்
கருமேலே என் கவனமிருக்கும்
வித்தாகி விழும் வரை விட்டு வைப்பாரோ
என்றும் பயமிருக்கும்

வீதியிலே வியாபாரி விற்பனைக்காய் வைத்திருக்கையில்?
அன்புப் பரிசென்று
ஆவலுடன் வாங்கிச் செல்வார்
அதை வாங்கையிலே
ஆயிரம் பேரம் பேசுவர்
அன்புக்கு விலைபேசும்
இவரை எண்ணித்
துன்பப்படும் என் மனது

காரியம் நிறைவாக்கக் காணிக்கைாய்க் கொடுக்கையிலே?
கருணையில்லாதவர்
ரசனையில்லாதவர்
கைமாறும் பொருளான
காலத்தை எண்ணி நோவேன்

இன்றைய இளம் பெண்களில்
அனேகர் பூச் சூடுவதில்லையே?
— இக்கேள்வியைக் கேட்டதும் மலர் தனக்குள் ஏதோ எண்ணியவாறு
ஒரு குறும்பான புன்முறுவலுடன்
"முன்பெல்லாம் நறுமணம் கமழும் பெண்களின் கூந்தலைச் சுற்றித்
திரிந்தீர்கள்.இப்பொழுது தேன் எடுக்க இடம் போதவில்லையோ?"
என்று திருப்பிக் கேள்வி கேட்ட தேன்மலர் அதே புன்னகையுடன்
தேனியாரை ஊடுருவிப்பார்த்தது.

தேனியார் பதில் கூறமுடியாது நெளியவும் மலர் நிலைமையைச் சமாளித்துக்கொண்டு தொடர்ந்தது —

மெல்லிசையும் மென்காற்றும் மனதை
அள்ளும் சுகம் ஆனந்தமேதும்
அறிந்ததில்லை இவரென்றும்
துள்ளிசைபாடும் துப்பாக்கிவேட்டுக்கே
துடிப்புடன் ஆடுகின்றார்
மண்மீது கொண்ட மாறா அன்பால்
செங்குருதி சிதறுப்பட்டு
செம்படையானபோதும் கூந்தல்
சிங்காரம் வேண்டுவதில்லையிவர்
செங்களத்தில் சிங்களத்தைச்
சங்காரம் செய்யும் வரை.

இதுவரை கூறிய மலரின் பதில்களுக்கு ஆமாம் என்று தலைசைத்து ரசித்துக்கொண்டிருந்த தேனியார் இவ்வேளை உற்சாக மீறி தீக்காயத்தின் வேதனையை மறந்தவராக துள்ளிக்குதித்து —

"தன்கருத்தில் தளர்வில்லா தமிழீழப் பெண் மகளிரே
நீர் வாழ்க வாழ்க!" என்று வாழ்த்திவிட்டு அடுத்த கேள்விக்கு வந்தார்.
இன்னபிற இடமெல்லாம் இருந்து அனுபவித்ததை நீர்
வண்ணமுறக் கூறக் கேட்டேன்
இனியுமக்கு இதமாய்ப் பிடித்த
நல்ல இடம் எதுவோ? அதைக்கூறும்!

— தேனியார் இக் கேள்வியைக் கேட்டதும் சில வினாடிகள் கண்களை மூடி சிந்தனையில் ஆழ்ந்த தேன்மலர் தொடர்ந்தது —

காலைக் கதிரவன் ஒளி கண்டு
களிகொள்வேன் தென்றற்
காற்றுவந்து தொட்டதும்
கதகதப்பில் மெய்சிலிர்ப்பேன்
அருமந்த மகரந்தம் அநியாயம் ஆகாமல்
தினம் வந்து நீர் தீண்டும்வேளை
பரவசம் கொள்வேன் பரந்த உலகில்
பிறந்த மண்ணைவிட எனக்குப்
பெரியது ஏதுமில்லை
மண்ணுக்காய்ப் போராடி மரணித்த மாவீரர்
'கல்லுக்குள் உறங்குகின்றார் — அந்தக்
கல்மரங்கள் முளைத்த காட்டில்
கற்றூணைச் சுற்றிவரும் செடியிலொரு
பூவாய்ப் பூத்திருப்பதே என் பாக்கியம்
அதுவே என் பூர்வீக பலன்என்பேன்.



ஆமாம்! அவர் காலடியில் கல்லறையில் மலர்வதே எனக்கு ஆத்ம திருப்தி ஆகும் என்று பெருமையுடன் கூறி உணர்ச்சிவசப்பட்டது மலர்.

ஆகா!ஆகா! அற்புதம் அற்புதம் என்று துள்ளிக்குதித்த தேனியாரை இப்போது மலர் குறுக்கிட்டது.

"என்னை வாழ்த்துவது இருக்கட்டும் நண்பரே! நானும் உம்மிடமிருந்து சிலவற்றை அறிய விரும்புகின்றேன். சுறுசுறுப்புக்கும் உழைப்புக்கும் பேர்போனவர்கள் நீங்கள். மானிடர் தவிர்ந்த மற்றைய உயிரினங்களில் நீங்கள்தான் பாதுகாப்புக்கென்று போர்ப்படைப்பிரிவும் வைத்திருக்கின்றீர்கள். உங்கள் ராணியின் நடவடிக்கைகள் புதிரானவை.அதனால் மேற்குநாடுகளில் உங்கள் ராணித் தேனியின் செயற்பாடுகளை ஆராய்ச்சிசெய்கிறார்களாமே அதுபற்றி நானும் அறிய விரும்புகின்றேன்.சற்று விளக்கமாகக் கூறுவீரா? ஆமாம்! அதற்காக ஒருவருக்கு நோபல் பரிசும் கிடைத்திருக்கிறதல்லவா?"

— தேன்மலர் ஆவலுடன் கேட்கவும் தேனீ தொடர்ந்து கூறிற்று —

"நாம் தேன் சேகரிக்க கூட்டிலிருந்து வெளியில் பல மைல் செல்வோம்.பின் திரும்பி குறிப்பிட்ட கூட்டையும் வந்தடைவோம். இதற்கெல்லாம் ராணித் தேனிதான் வழிகாட்டுவார். இவையெல்லாம் எப்படி என்பது மனிதருக்கு புரியாத புதிராக இருந்தது. அதனால்தான் ஆராய்ச்சி மூலம் கண்டு அறிந்து கொண்டார்கள்.!"

"மனிதருக்குமட்டுமென்ன எனக்கும்தான் புரியாத புதிராக இருக்கிறது கூறும்.!"

"ராணித்தேனியார் சூரியன் வானத்தில் நிற்கும் திசைக்கேற்ப ஓர் நடனமாடுவார். அதற்கு தேனீ நடனம் என்று பெயர். அந்த நடனத்தின் போது சமிக்ஞைமூலம் தேன் இருக்கும் இடத்தையும் கூட்டையும் அறிந்துகொள்வார்.!"

மலர் இடைமறித்தது —

"அதற்கு அவர்கள் ஏன் இலங்கையில் வந்து ஆராய்ச்சி செய்ய வேண்டும்?"

"இலங்கையில்தான் மதியம் பன்னிரண்டு மணிக்கு உச்சியில் சூரியன் இருக்கும். உச்சிப்பொழுதில் ராணித்தேனியின் நடனம் எப்படி இருக்கும் என்று அறிந்துகொள்ள இங்கு வந்தார்கள்!"

"உச்சிப்பொழுதில் எப்படிஇருந்தது உங்கள் ராணியின் நடனம்?"

"அப்பொழுது எமது ராணி நடனம் ஆடாது அந்தரத்தில் அசையாது நிற்பதாகக் கண்டறிந்தார்கள்!"

"இத்தனை வல்லமையுடைய ராணி உம்மை அழைத்துச்சென்று மறுவாழ்வு அளிப்பார்!"

அவ்வேளை திடீரென தேனியார் ஏதோ இன்ப அதிர்ச்சி ஏற்பட்டவராக சிறக்கைகளைப் படபடவென அடித்துத் துள்ளி எழுந்தார்.

ஆம் ராணித் தேனி சமிக்ஞை மூலம் தனது நண்பருக்கு அழைப்பு விடுக்கின்றார் என்பதைத் தேன்மலர் புரிந்துகொண்டது.

பிரிந்து செல்லவேண்டியதை எண்ணிய தேனியார் நன்றிகலந்த பார்வையைச் செலுத்தவும் மலர் நிலைமையை உணர்ந்து ராணியையைத் தாமதிக்க வைக்க வேண்டாமென்று அவசரப்படுத்திற்று.
பிரியும் வேளையில் "எனக்கு மறுவாழ்வு கிடைத்துவிட்டது. ஈழத் தமிழருக்கு?" என்று ஏக்கத்துடனும் அனுதாபத்துடனும் கேட்டார்
"ஈழத்தில் விடுதலைக்கான சமிக்ஞைகள் தினமும் வந்து கொண்டு இருக்கின்றனவே நீர் அறியவில்லையா? விரைவில் அவர்கள் விடுதலை அடைவார்கள்.கவலையை விடும்!" என்று தெம்பூட்டி தேனியாரை வழியனுப்பிய மலர், தேனியார் தன் ராணியைச்சென்றடைந்து மறையும்வரை இமைக்காது ஆர்வமுடன் பார்த்துக்கொண்டிருந்தது.

□□□

## ஒரு பத்திரிகை ஆசிரியரின் கடமைகளும் உரிமைகளும்பற்றி ஒரு நோர்வேஜிய நூலிலிருந்து

-பத்திரிகையின் நோக்கில் அவதானமாக இருத்தல்.
-கருத்து,பேச்சு சுதந்திரத்தை உறுதிசெய்தல்.
-அதன் மூலம் தன் சமுதாயத்துக்கு உண்மையாய் உதவல்
--பிரச்சனை சம்பந்தமாக திறந்த தகவல்-கருத்து பரிமாற்றம்
-செய்தி,தகவல்,உண்மைகளை தெளிவாக வாசகர்க ட்களித்தலும்,பத்திரிகையின் சுயகருத்தும்,மதிப்பீடும்
-பத்திரிகையின் கொள்கைக்குட்பட்டு,திறந்த,சுயாதீன மான கருத்தை உருவாக்கல்,பேணல்.
-நிர்வாகிகளால்,பிறரால் கருத்துத்திணிப்புக்கு ஆட்படாமை.
--பத்திரிகையின் உள்ளடக்கங்கட்கு பொறுப்பாகல்.
(பிழையின்றி தன்மொழியை எழுதுதலையும் இத்துடன் நாம் அடிப்படையாக சேர்த்துக்கொள்ளலாமே)

(நன்றி சர்வதேச தமிழர் – நோர்வே)



(26ம் பக்கத் தொடர்ச்சி)

யோசிச்சுக் கொண்டிருக்கிறான்..என்ன விசயம் என்று கேட்டன்..ஒன்றும் சொல்லுறான் இல்லை..உனக்கு சொல்லாமல் எனக்கு சொல்லுறானே போய்க் கேள்மச்சான்!" என்றுசொன்ன சிவாவை லட்சியம் செய்யாமல் செந்தூரனிடம் விரைந்தான் வசந்தன்.
"டேய்..செந்து என்னோடை ஏதோ கதைக்க வேணும் என்றிட்டு இதிலை இருந்து வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தா என்ன அர்த்தம்...?"
"இதில இரு மச்சான் சொல்லுறன்...உனக்கு சொல்லாமல் யாருக்கு சொல்லப் போறன்..."
"சரி இருந்தாச்சு..சொல்லு என்ன விசயம்? வீட்டில ஏதேன் பிரச்சினையே..ஏன் யோசிச்சுக் கொண்டு இருக்கிறாய்?"
"வசந்தன் இப்ப நான் சொல்லப்போற விசயத்தை உன்னோட வைத்துக் கொள்... ஒருத்தருக்கும் சொல்லக்கூடாது! நீ காதலைப் பற்றி என்ன நினைக்கிறாய்?"
"அதுசரி நீ என் இப்ப திடீரெண்டு காதலைப்பற்றிக் கேட்கிறாய்?"
"அதைப்பற்றி நான் பிறகு சொல்லுறன்...இப்ப நீ இதுக்குப் பதில் சொல்லு!"
"காதலைப்பற்றி எனக்கு பெரிசா தெரியாது...என்ர கருத்து என்னெண்டா வேலை வெட்டி இல்லாதவங்களும் பொழுது போக்கத்தவங்களும் தங்கட நேரத்தை போக்கிறதுக்காக செய்யுற தொழில்தான் காதல் என்னும் வியாபாரம். இதைவிட இன்னும் கூடுதலா சொல்லுறதெண்டால் நான் உதிலை அனுபவப்பட்டிருந்தால் சொல்லியிருப்பன்... இனியாவது சொல்லு ஏன் இப்ப காதலைப்பற்றிக் கேட்கிறாய்?"
"வசந்தன் நான் இன்னுமொரு கேள்வி கேட்கிறன்.நீ எங்கடை இங்கிலீஸ் மாஸ்ரரின் மகள் சாந்தியைப்பற்றி என்ன நினைக்கிறாய்?"
"அவள் மச்சான் பரவாயில்லை. நல்ல அடக்கமான பிள்ளை. பேருக்கேத்த மாதிரி நல்ல சாந்தமான பிள்ளை. அதுசரி முதல்ல காதலைப்பற்றி கேட்டாய். இப்ப என்னடா என்றால் சாந்தியைப்பற்றிக்கேட்கிறாய். இரண்டையும் கூட்டிப் பார்த்தால்...டேய்...டேய்...நான் அப்பவே நினைச்சனான் நீ மாஸ்டர் வீட்டை இங்கிலீஸ் படிக்கப்போறன் என்று நெடுகிலும் அந்தப் பக்கம் போகேக்கையே ஏதோ பிசகுவரப்போகுது என்று..ஆனால் இவ்வளவு சீக்கிரம் வரும் என்று நான் நினைக்கேல்லை...அதைவிட அவள் சின்னப் பிள்ளையடா... இப்பத்தான் O/L படிக்கிறாள்போல கிடக்கு...!"
"வசந்தன் காதல் வயதைப்பார்த்தோ சாதி மதம் இதுகளைப் பார்த்தோ வாறதில்லை. காதலும் மரணமும் எப்ப வரும்என்று யாருக்கும் தெரியாது. நான் இவ்வளவுநாளும் என்னோடு படிக்கிற எத்தனை பிள்ளைகளுடன் பழகியிருப்பன் அவர்களிலை இப்பிடியான எண்ணம் வரேல இப்பத்தான் சாந்தியில அந்த எண்ணம் வந்திருக்கு...அவளுக்கு அழகு பணம் அந்தஸ்து எல்லாம் இருக்கலாம்...ஆனால் நான் அதுகளைப் பார்த்து அவளை விரும்பேல நீ சொன்னமாதிரி அவளுடைய அடக்கமான பண்பும் அமைதியான சுபாவமும்தான் என்னை அவள் பக்கம் ஈர்த்தது..."

"சரி செந்து.நாங்கள் இவ்வளவும் கதைக்கிறம்...அவளின்ர விருப்பத்தை அறிஞ்சிட்டெல்லோ மற்றதைப் பற்றி யோசிக்க வேணும்.."

"இல்லை வசந்தன்.இப்ப வேண்டாம்.கொஞ்சநாள் பொறுத்துக் கேட்பம். அவளுக்கும் ரெஸ்ற் வருகுது..எனக்கும் A/L ரெஸ்ற் வருகுது.இப்ப நான் கேட்டுஅவள் ஏதேன் எதிர்மாறான பதிலைச் சொல்லிட்டாள் என்றால் மனம் குழம்பிடும்."

"இப்ப மாத்திரம் குழம்பாமலே இருக்கிறாய்...?நான் ஒன்று சொல்லுறன் கேள். 'காதலிக்கக் கூடாது.அதை மூடிவைக்கக் கூடாது' என்று ஒரு பாட்டு இருக்கு. நீ கேள்விப்பட்டு இருப்பாய் என்று நினைக்கிறன்.எதையும் மூடி வைக்கலாம் ஆனால் காதலைமட்டும் மூடி வைக்கக்கூடாது.நீ வீணா மனதில ஆசையளை வளர்த்துப்போட்டு பிறகு கேட்க அவள் மாட்டன் என்று சொன்னா நீ தாங்கமாட்டாய்!"

"அப்பிடி என்றால் என்னசெய்யலாம்.நீதான் எனக்கு கேட்டு சொல்லவேணும்".

"நான் கேட்கிறது பிரச்சினை இல்லை.நான் கேட்க அவள் போய் வீட்டில சொல்லிவிட்டாள் என்றால்...? சரி..எதுக்கும் நாளைக்கு அவள் ரியூசனால வரேக்கை மறிச்சுக் கதைப்பம்!"

"இப்பத்தான்ரா என்ர மனசு லேசா இருக்கு..கடவுளே நாளைக்கு சாந்தி நல்ல முடிவா சொல்லவேணும்!" என்று செந்தூரன் கடவுளை வேண்ட —

"என்ன எண்ணத்துக்கு கடவுளிட்ட வரம் கேட்கிறது என்ற விவஸ்தையே உனக்கு இல்லை. நீ கவலைப்படாமல் போய்ப்படு.. நேரமாச்சுது நான் போய்ட்டு வாறன் நாளைக்குப் பார்ப்போம்!" என்று விடைபெற்றான் வசந்தன்.

மறுநாள்....

(தொடரும்)

எழிலன் எழுதிவரும்
"சத்தியத்தின் சுவடுகள்"
தொடர்கட்டுரை
அடுத்த இதழில்!



# வானம் வசப்படும்



யார் அந்தப் பெண்!
வாராது வந்த மாமணியாய்,
வார்த்தைகளுக்கு வரக்கூடிய
வர்ணனைகளையும் தாண்டி அந்த
வழியைக்கடந்துசென்ற வசந்த வீச்சு,
அவன் வாழ்நாளிலே இதுபோல்
ஒருத்தியைச் சந்தித்ததே இல்லை.
அவன் மனமெங்கும் ஆர்ப்பரிக்கும்
ஸ்பரிஷங்கள் இடைவிடாது குலுங்கிக்
கொள்கின்றது. அசைந்துவரும்
பூங்கொடியாய், யார் எவர் என அறியும்
முன்பே சிரிப்பைச் சிந்திப்போகும் இந்தச்
சித்திரத் தேரின் முகச் சிவப்போடு
போட்டிபோட்டு உறுதிசெய்து
கொண்டிருக்கும் நெற்றிக் குங்குமம்,
யாரோ ஒருவனுக்கு உரிமையாகிவிட்டது
என்பதை மனம் சற்று ஆழமாகவே
அழுத்திச் சென்றது அவனுக்கு.
சாதாரணனின் பார்வையிலிருந்து ஒரு
எழுத்தாளனின் மனம் சற்று
வித்தியாசமாகவே ஆகர்ச்சித்துக்
கொள்கின்றது. ஆம். அவன்
இருவாரங்களுக்கு முன்புதான்
அந்தத்தொடர் மாடியில் இருக்கை
தேடிக்கொண்டான். யாருமே தேச
உறவுகள் தென்பட வில்லையே என
ஏங்கியிருந்தபோது....
இந்தக் குளிர் நிலவின் குளிர்ச்சி
எழுந்துவிழுந்த நெஞ்சில் ஆயிரம்
பட்டாம் பூச்சிகளின் அடிவருடல்.

ப. பசுபதிராஜா



பாவலரேறு பெருஞ்சித்திரனார்
*(10.3.1933 - 11.7.1995)*

அடுத்தவன் தோட்டத்து மாங்கனி என்ற பிறகும் அதை யாசிப்பதும் நேசிப்பதும் தவறுதான். ஆனால் மனிதமனங்களுக்குள் இருக்கும் ஆர்ப்பரிப்புக்களைக் கண்டுபிடிக்கும் கருவியொன்று இருந்திருக்குமானால் புனிதப்பட்டங்கள் புழுதியுள் போயிருக்கும். தவறு என்பது செயலால் வரும்வரைதான் அநேகமாக நமக்குக் கண்டனப்பொருள். ஆனால் மனிதமனம் பொதுவாக தவறும் இயல்புடையதுதான்.

நாள்கள் நகர்ந்துகொண்டிருந்தது.

மீண்டும் மீண்டும் சாலைகளில் முகம் காட்டிப்போகும் இந்த முழுநிலவின் தரிசனம் மௌனங்களுக்குள் ஆனந்தத்தை அளவளாவிக் கொள்கின்றது.

அவளின் இரண்டு குழந்தைகளையும் பாடசாலைக்கு அழைத்துப் போகும் போதே அநேகமாக அவளைச் சந்திக்க நேரம். தேச உறவின் தெரிவுக்கு புன்னகையை இனங்காட்டி விலகிப்போகும் இந்தத் தென்றலின் தரிசனங்கள் இயல்பாகிவிட்டது.

அவன் இருக்கும் தொடர்மாடியிலிருந்து ஐந்துவீட்டுக்கு இடைவெளியில் அவர்கள் குடியிருந்தார்கள். ஆனால் அவன் வந்து ஒருமாதமாகியும் இந்தச் சீர்வதனத்தென்றலை தன் மன வயலில் அடைத்துக்கொண்டவனின் அரவத்தைக்கூடக் காணமுடியவில்லை. அந்த அதிர்ட்டசாலியைப் பார்க்க வேண்டும்போல...

சில நாள்கள்தான் கடந்திருக்கும்.அவன் எதிர்பாராதவிதமாய் அந்தத் திருத் தம்பதிகள் எதிரே வந்துகொண்டிருந்தனர்.

கண்கள் அந்தக் காட்சியை நம் மறுத்தன.



# இயல்பை மாற்றிடாதே!

எந்தத் திசையில் நீ இருந்தாலும்
ஏற்றந் துறந்திடாதே!- தமிழின்
எழிலைத் துறந்திடாதே! பழங்
கந்தலை யுடுத்துங் கஞ்சியை யருந்தினும்
கனிவை யிழந்திடாதே!- இனக்
கருத்தை யழித்திடாதே!

எந்த நிலத்தினில் நீ இருந்தாலும்
இயல்பை மாற்றிடாதே!- இனத்தின்
இணைப்பை யறுத்திடாதே!- உன்
முந்தையர் வாழ்ந்த முதுதமிழ் நாட்டின்
மொழியை மறந்திடாதே- உணர்வை
முனி யாக்கிடாதே!

-பாவலரேறு பெருஞ்சித்திரனார்.
(10.03.1933 - 11.07.1995)-

இந்தப் பூலோகசுந்தரியின் புருசன் இவனா?

இல்லை இல்லை என்றே மனத்தாளம் கொட்டியது.

எதிரும் புதிருமாக வந்துகொண்டிருந்தாலும் அவர்கள் அவனைப் பார்த்துச் சிரிக்கின்றபோதும் அவன் மதியிழந்து மூர்ச்சையடைந்திருந்த நேரம்....

"ஹலோ!" என்று அவள் புருஷன் அழைக்கும் குரல்கேட்டு நினைவுகளை சற்று மீண்டுவந்து பதிலுக்கு வரமறுக்கும் புன்னகையை உதட்டிலிருந்து ஹலோ சொன்னான்.

முகம் எங்கும் பரபரப்பின் ரேகைகள்.

"என்ன புதுசாய் குடிவந்திருக்கிறீர்கள் போல"

அவளும் புருஷன் அருகேநின்று புது உறவின் வருகையை வரவேற்றாள்.

நினைவுச் சிதறல்களைக் கடந்து மனதை ஒரு நிலைப்படுத்தி அவனும் அவர்களோடு சிலவற்றைப் பகிர்ந்துகொண்டான்.

"உங்களுக்கு நேரமிருந்தால் எங்கள் வீட்டிற்கு வாங்கோ!" என்றவாறு இருவரும் அவனிடமிருந்து விடைபெற்றனர்.

மீண்டும் அவன் நினைவுகள் அவனைச்சுற்றி வலம்வந்தது.
தொந்திவயிறு, சொட்டைத்தலை, யானை நடை, ஒப்புரவு இல்லாத முகம், ஆங்காங்கே பீறிட்டு நிற்கும் பற்கள், இந்தக் கறுமனா இவள் புருஷன்...?
அட கடவுளே உனக்குமா கண் இல்லை.
கண்மூக்குப்பார்த்து, நடைபார்த்து, முடிபார்த்து, படிப்புப்பார்த்து, ஜாதி பார்த்து, குலம்கோத்திரம்பார்த்து, தேடி எடுத்து அம்மிமிதித்து அருந்ததி பார்த்து, என்று ஏகப்பட்ட சமாச்சாரங்களைச் சரிசெய்தும் ஒரு நிலைக்கு வராத யாழ்ப்பாணத்து அந்தஸ்துப் பெட்டகத்தில் இப்படியொரு விதிவிலக்கா?
அவனால் நம்பவும்தான் முடியவில்லை.
ஆமாம்! கல்யாணத்திற்குமட்டும்தான் எத்தனை எத்தனை காரணகாரியங்கள் சங்கமமாகின்ற நமது வாழ்வில் இதுவும் ஒரு அம்சம் என்று அவன் எடுத்துக் கொண்டாலும். அந்த ஜோடியின் யதார்த்தத்துக்குள் புகுந்து பார்க்கவேண்டும்போல் ஒரு ஆசை இருந்துகொண்டேதான் இருந்தது.

ஒருநாள் ஒருவிசேட தினத்திற்காக அவன் வீட்டிற்கு வந்த அவர்கள் அவனையும்வருமாறு அன்பாணை விடுத்தனர். அவனும் அங்கு சென்றான். அந்நியோன்யமான உரையாடல், பரபரப்பான உபசரிப்பு, இருகுழந்தைகளின் அரவணைப்பு எல்லாமே அவனுக்கு புத்துணர்ச்சி அளித்தது.
"என்ன நீங்கள் எப்ப பார்த்தாலும் புத்தகத்தோடு போகிறீர்கள் ஏதாவது படிக்கிறீர்களா?"
குசினிக்குள் நின்று குயில் ஒன்று கூவியதுபோல் இருந்தது அவனுக்கு.
அப்போதுதான் அவன் அந்த விசயத்தை அவர்களிடம் சாதுவாகச் சொன்னான்.
"நான் ஒரு எழுத்தாளன். பல கதைகள் எழுதியிருக்கின்றேன்!"
இவ்வளவுதான் அவன் கூறியிருப்பான் உடனே அவள் —
"என்ன நீங்கள் எழுத்தாளரா?" குசினியைவிட்டுக் குதித்தோடி வந்தாள்!
"ஆம் எழுத்தாளன்தான் அதற்கு ஏன் இவ்வளவு ஆச்சரியப் படுகிறீர்கள்? எழுத்தாளன் என்றால் ஏதோ கடவுளின் அம்சம் என்றா நினைக்கின்றீர்கள் அவர்களும் மனிதர்கள்தான். மனித பிரதிபலிப்புக்களை தங்களால் ஆனவரை கூறுகின்றார்களே தவிர மற்றவர்களைவிட மகத்தானவர்கள் இல்லை.!"
செற்றியில் இருந்த அவளின் கணவன்,
"இஞ்சை பாருங்கோ இவளுக்கும் கதைகள் என்றால் நல்லா பிடிக்கும். நான் பத்திரிகைகள் வாங்கியே என் சம்பளம் தீர்ந்துபோகும். உலகத்திலை இருக்கிற எழுத்தாளர் எல்லாம் சுட்டுவிரலுக்குள்ளை இருக்கினம்.!"
தன் மனைவி பெருமையை ரொம்பவும் உசத்திக் காட்டி ஓய்ந்தான்.
"இஞ்சேருங்கோ நீங்கள் எத்தனை கதைப்புத்தகம் எழுதினனீங்க?"
ஒரு குழந்தையின் பரிவுசொட்ட கேள்விக்கணையால் துளைத்தாள்.
புருஷன் எப்போது கொண்டுவருவான் அதை எப்படியெல்லாம்



வளையல்களும் சேலைகளும் வாங்கலாம் யாரைச் சீட்டுக்குச்சேர்த்து ஏமாற்றலாம் என்ற வக்கிரபுத்தி தலைவிரித்தாடும் ஐரோப்பிய தமிழ்ப் பெண்களில் கல்விக்கும் சமுதாயமறுமலர்ச்சிக்கும் இலக்கிய மாதர்மத்திற்கும் தன்னைப் பலியாக்கக் கூடிய புதுமைப் பெண்ணா இவள்?
"நான் அதிகமாக புத்தகங்கள் எழுதவில்லை. பத்திரிக்கை கதைகள்தான். மலர்மன்னன் என்ற புனைபெயரில் எழுதுகின்றேன்."
அப்படிக் கூறி வாய் ஓய்வதற்குள்
"மலர்மன்னனா நீங்கள்... ஐயய்யோ பார்த்தீங்களா? எத்தனை அதிர்ஷ்டசாலி நான் என்று.. உங்க கதைகள் எத்தனை வாசித்திருக்கிறேன்.. நான் செய்த பாக்கியம்தான் என்ன?"
அவளின் இலக்கிய ஆர்வத்தை நன்குணர்ந்த அவள் புருஷன்
"இனி அவள் இலக்கியச்சொற்பொழிவாற்றப் போறாள் நீங்கதான் கேளுங்கோ!"
என்றவாறு அவனிடமிருந்து விடைபெற்று வேறுவிடயமாகக் கிளம்பினான்.
கணவனின் போக்கை அசட்டை செய்தவாறு அவன் எழுதிய கதைகளின் விமர்சனத்தை தொடர்ந்தாள். புகலிட இலக்கியஉலகில் இருக்கக்கூடிய நல்ல எழுத்தாளர்களின் சாயல்களை மூச்சுவிடாமல் விமர்சிக்கத் தெரிந்த அழகைவிட, அந்த நீள்விழி, நீண்ட கூந்தல், இரண்டு குழந்தைகளின் தாய் என்ற சிறிய அளவுகூட வக்கரிக்காத தேகக்கட்டு, அடுக்குப் பல் வரிசைகளுக்கிடையே அடிக்கடி கடித்துக்கொள்ளும் இதழ், இலக்கியத்தை இன்னும் சுவைத்துத்தரும் குயிலோசை, அவன் இதயத்தை சல்லடை போட்டுக்கொண்டிருந்தது.
இத்தனை திறமையோடும் அழகோடும் அவன் இதுவரை எவரையும் சந்தித்ததே இல்லை. ஏனெனில் அறிவிருந்தால் அழகிருக்காது அழகிருந்தால் அறிவிருக்காது,ஆனால் இரண்டுமே சேர்ந்திருக்கும் வாய்ப்புப் பெற்ற இவளின் வரனோ எதுவமற்ற உழைக்கும் யந்திரம்.
பேசிக்கொண்டிருக்கும் போதே நேரத்திற்கு இவ்வளவு அவசரமா? எத்தனை மணித்தியாலங்கள் கடந்தும் இப்பதான் போலிருந்தது அவனுக்கு.
ஒருவாறு பேச்சுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு அவன் விடைபெற்ற போது அவள் அவசரமாகக் குசினிக்குள் இருந்த பார்சல் ஒன்றை அவன் கையில்கொடுத்து "எங்கள் சின்ன அன்பளிப்பு!" என்றாள் பெருந்தன்மையாக.
"என்ன குருதட்சணையா?" என்றான் விகடமாக.
இருவரும் சிரித்து நிற்க "இஞ்சேருங்கோ! நீங்க வைச்சிருக்கிற புத்தகம் எல்லாவற்றையும் வரிசைக்கிரமமாகத் தாங்கோ நான்படிச்சிட்டுத் தருகிறன்!"
கொஞ்சம் வார்த்தைகள் கெஞ்சிக்கொள்ள அவனும் தலையசைத்து விடைபெற்றுக் கொண்டான்.

நாள்கள் செல்லச் செல்ல அந்த இனிய உறவு பூத்துக் குலுங்கியது.
வரிசைக்கிரமமாய் அவன் புத்தகங்களை வாங்கிச்செல்வதும்,அவன் எழுதிக் கொள்கின்ற கதைகளில் விமர்சனகாரியாகவும்மாறி அவன்வீட்டிலேயே அதிக

நேரத்தைக் கழித்தாள்.

கணவனுக்குவேண்டிய கடமைகளைச்செய்வதும் குழந்தைகளின் நலனைக் கவனிப்பதும் அவள் எந்த விதத்திலும் குறைய விடவில்லை.

அந்த நேரங்களில்தான் அவனுக்கு இனந்தெரியாத இன்ப உணர்வுகள் எழுந்து எழுந்து ஈரமற்றவிழும். ஆனால். அவனுக்கு அவள்மீது இருந்த மோகம் சற்று மிதமிஞ்சியே வளர்ந்தது.

எப்படியாவது தனது உள்ளக்கிடக்கையை அவள் வாழும் வாழ்க்கைமீது கொண்டிருக்கும் பிடிமானத்தை அறிய முயன்றான்.

அதோ அவளும் வருகின்றாள்.

வாசலைத்தாண்டி, அவன் எழுதிக்கொண்டிருக்கும் பிரத்தியேகமான அறைக்குள் இருக்கும் கதிரையில் உட்கார்ந்தாள்.

"இன்றைக்கு என்ன தலைப்பு? என்ன கருப்பொருள்? எங்கே ஒருதடவை பார்க்கலாமா?" இலக்கிய தாகத்தால் தத்தளித்தாள் அவள்.

அவனுக்கு கபட எண்ணங்கள் உள்ளே களிநடம் புரிந்தது.

துடிக்கும் நெஞ்சை சற்று அழுத்திக்கொண்டான்.

எப்படித்ததன் பழகினாலும் ஒருவரின் உள் விவகாரங்களில் தலையிடுவது அநாகரிகமானதுதான்.

ஆனால் எல்லை கடந்துவிட்ட நட்பை அதற்குச் சாயம் பூசி...

"இஞ்சேரும் நான் உங்களைப்பற்றி ஏதாவது கேட்டால் குறைநினைக்க மாட்டீர்களே!"

இலக்கியப் பிரக்ஞைகளோடு போராடும் அவளை இடைநிறுத்தியது அவனது கேள்வி. மெல்லிய புன்னகையை இதழில் ஒளித்து கேளுங்கள் என்பதுபோல் பார்வையை வீசினாள்.

அவன் கேள்வி எதுவாக இருக்கப் போகிறது என்பதை குறிப்பறிந்து முகக்குறிகள் நெளிந்தன.

"இவ்வளவு அறிவும் அழகும் படிப்பும் உடைய உங்களால் ஏன் உங்களுக்கு ஏற்றதுபோல் ஒருவரைத் தேடிக்கொள்ளமுடியவில்லை? அந்த ஏக்கம் உங்களை வாட்டியதுண்டா?"

அவள் தலை குனிந்தாள்.

எதுவுமே கூற முடியாது முகமெங்கும் அபிநயம் பொங்க எதை எதையோ தேடுவதுபோல் பாசாங்குசெய்தாள். மௌனமாகக் கழிந்த அந்த ஒருசில நிமிடங்களைத் திசைதிருப்பி ஒருவகை அசட்டுத் தைரியத்தோடு

"இந்தப் புத்தகத்தை நான் இன்று எடுத்துச் செல்கின்றேன்!" என்றவளின் பதட்டங்களை இடைவிடாது ரசித்துக் கொண்டிருந்த அவனும் ஆம் என்று தலையசைக்க அவள் வாசலைத்தாண்டி போயக்கொண்டிருந்தாள்.

அப்போதுதான் அவன் உள்ளத்தில் இருந்த கபட எண்ணங்கள் தவறான பார்வைகளில் கருக்கட்டின.

இந்தப் பொன்வதனப் பூங்காவின் சிருங்காரம் தனக்குள் அடைபட்டுவிடும் என ஆனந்தத்தில் ஆர்ப்பரித்தான்



உள்ளமும் உணர்வுகளும் உவந்தெழுந்து உரம் ஊட்ட அவன் அந்தக் கடிதத்தை வரையத் தொடங்கினான்.

'அன்பே! வாழ்க்கை ஒருமுறை கிடைக்கின்ற வரம். அதைப் பூரண திருப்தியோடு வாழ்வதுதானே மகிமை. உன் சுட்டும் விழியும் கொட்டும் அறிவொளியும் கண்டு வெட்டவெளி ஆனதடி என்மனம். அன்பே உனக்கு விருப்பமானால் என் வாசலைத் தேடிவா! நாம் வசந்தங்களோடு கைகுலுக்கலாம்.

இப்படிக்கு...உன்...'

பரபரவென கடிதத்தை மடித்தான்.

நாளைக்கு அவள் வருவாள்.

ஜானகிராமனின் மோகமுள் என்றால் அவளுக்கு கொள்ளைப் பிரியம்.

அவள் அந்தப்புத்தகத்தை கேட்டிருந்தாள்.

அதற்குள் மடித்த கடிதத்தை பக்குவமாக வைத்தான்.

ஏக்கங்கள் எழுந்துவிளையாடும் மனத்திடலில் பயங்களும் வந்து படமெடுக்க உறக்கமற்று அந்த நாள் விடிந்தது.

அடுத்தநாள் அவள் வரும் நேரம்.

அவன் எதிர்பார்த்துக் காத்திருந்தான். அவளும் வந்தாள்.

நேற்றைய நிகழ்வுகளின் பிரதிபலிப்புக்கள் எதுவுமின்றி வழமையான சம்பாஷணைகளோடு

"இதோ உங்களுக்குப் பிடித்தமான நாவல் இன்றுதான் கிடைத்தது!"

ஆர்வமேலீட்டால் அவளும் அதை நெஞ்சோடு அணைத்தபடி இன்பத்தில் துள்ளிக் குதித்தபடி போனாள்.

விளைவுகள்விபரீதமாகிவிடுமா? அல்லது வினையாகுமா?

நெஞ்சம் ஆயிரம் ஆயிரம் கேள்விகளில் மிதந்தது.

மனப்போராட்டம் அவனை அலைக்கழித்தது.

இரவும் விடிந்து வரும்நேரம் கடந்தும் அவள் வரவில்லை.

நாளை பதில் தருவாள் எனக் காத்திருந்த கணக்கு தவறியது.

ஒருநாள் ஒருவாரம் ஆகியும் அவள் வரவில்லை.

அவள் வீட்டிற்கு போய் விபரம் அறியும் அளவுக்கு அற்புதமான காரியமும் அல்ல அவன் செய்தது.

கற்பனைக்கடிவாளங்கள் தகர்ந்துவிழ பயம் அவன் உள்ளத்தில் கொழுந்து விட்டது. தப்பான காரியத்திற்குத் தான் துணைபோயிருப்பதாக மனம் சுத்த சூன்யத்திற்குள் துவண்டது.

தொட்டால்தானே தெரிகின்றது சுடுவது நெருப்பென்று.

அந்த நேரத்தில் அழைப்பு மணியின் ஓசை காதில் பய பீதியை தெளித்தது.

அவள்தான்.அவளேதான்.

நெஞ்சப்படபடப்பு உச்சஸ்தாயியில் உதைத்துச் சித்திரவதை புரிய மெதுவாக எழுந்து வந்து கதவைத் திறந்தான்.

அதேகண்கள், அதேமுகம், சற்று ஒளியிழந்த புன்னகையை வீசி அனுமதிக்காகக் காத்து நின்றது.
சதிராடும் உள்மனதில் அலைகளை அடக்கி இவனும் அவளை உள்ளே வருமாறு அழைத்தான்.
இருவரும் மௌனமாக நடந்தனர்.தனக்குரிய ஆசனத்தில் அமர்ந்த அவன் எதிரே இருக்கும் ஆசனத்தில் அவளை அமரும்படி வேண்டினான்.
மீண்டும் நிசப்தங்கள் நிலவ அவன் ஏதோ எழுதுவதுபோல் பாவனை செய்துகொண்டிருந்தான்.
உதைக்கும் நெஞ்சை உறுதியாய் அணைத்தபடி..
அவளும் அதைக் கண்டுகொண்டு தன் எண்ணத்தை எப்படி இவனுக்குப் புரிய வைப்பது என்று சிந்தித்தாள்.
தன் கையிலே இருந்த மோகமுள் நாவலை மேசையில் போட்டாள்.
போட்டவேகம் அவன் உள்ளத்தை உதைத்தது.
"என்ன எல்லாம் படித்துவிட்டீர்களா?" உணர்வுகளின் உந்துதலை திசைதிருப்பினான்.
"ஆம். எல்லாம் படித்தாகிவிட்டது!" என்றவள் பெருமூச்சைச் சிந்தி தன் ஆதங்கத்தை வெளிப்படுத்தினளாள்.
"நான் கொஞ்சம் கதைத்தால் உங்களுக்கு சிரமமாய் இருக்குமோ?" என்றாள் சாவதானமாக.
"இல்லை!" என்றான் இயல்பாக.
"இலக்கியமும் எழுத்தும் சமூக நன்மைகளை இனம்காணத்தான்என்று நான் நினைக்கின்றேன். அந்த நல்ல எண்ணத்தை உலகில் விதைப்பவர்கள் என்றுதான் நோபல் பரிசுவரை இலக்கியத்திற்கு உயர்வுண்டு. ஏன் அதுதான் அதற்கு எல்லை என்று இல்லை. இந்தப் பிரபஞ்சத்தைத் தாண்டக்கூடியது அந்தச் செறிவு.என்ன நான் சொல்வது சரியா?"
முகத்தைத் தொங்கப்போட்டு திருதிருவென விழித்த அவனை சுட்டும் விழிகளால் தூக்கி நிறுத்தினாள்.
"சமூகங்களில் அதுவும் எங்கள் தமிழ்ச் சமுதாயத்தில் பெண்களுக்கு இருக்கக்கூடிய எவ்வளவு அவலநிலைகளை உங்களைப்போன்ற எழுத்தாளர்களின் கரம் அடித்து உடைக்க அருகிருக்கின்றது என்ற மாபெரும் அவாவில் ஆசையில்தான் நாங்கள் உங்களை கடவுள்களாகப் பார்க்கின்றோம்.ஆனால் நீங்களே இப்படியா? இப்பேர்ப்பட்ட எழுத்தாளர்களை விட தன் மனைவியை தன் இனிய குழந்தைகளை காக்கவேண்டும் கண்ணியமாக வாழவைக்கவேண்டும் என்று குளிர் பனி வெயில் என்று பாராது அதிகாலையில் எழுந்து பஸ்பிடித்து அதிகாரிகளின் பேச்சுக்கும் திட்டுக்கும் இரையாகி தன் குடும்பத்தைக் காப்பாற்றுகிறாரே என்கணவர் அவருக்கு முன்னால் எந்தக்கொம்பனாலும் இலக்கியகாரனாலும் இணைநிற்க முடியாது தெரியுமா?"
அவன் விழிகள் பிதுங்கி நாவறண்டது.



"மன்னிக்கவேண்டும் நான் உங்களைத் தரக்குறைவாக நினைக்கவில்லை. உங்கள் செய்கையைப் பார்த்து அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை. ஒரு நல்ல எழுத்தாளன் நீங்கள் உங்களைத் தரங்குறைக்க நான் யார்? ஆனால் எழுதுவது பெருமைக்காக என்றுமட்டும் நினைக்காமல் அழகு, ஜாதி, போலிக் கௌரவங்கள் இவற்றை உடைத்தெறிந்து எங்களுக்கு ஆதரவு தருவீர்கள் என்று பார்த்தால் நீங்களும் ஒரு சாதாரணன்தான் என்பதை உணர்த்திப்போட்டீங்கள். இனிமேல் இந்த மாதிரி குழந்தைத் தனத்தை விடுத்து சமுதாயம் நிமிர எமது கலாச்சாரம் எந்த மண்ணிலும் காப்பாற்றப்பட எழுதுங்கள். இப்பவும் ஒன்றும் கெட்டுப் போய்விடவில்லை. நான் என்றும் உங்கள் முதல் ரசிகை. நடந்தவைகள் எல்லாம் கனவாய் மறந்து. இனி உங்களிடம் நல்லவற்றை எதிர்பார்ப்பேன். உங்கள் மனம்நோகும்படி பேசியிருந்தால் மன்னிக்கவும்.!"
மீண்டும் முகம்மலர்ந்த சிரிப்பைசிந்தி வீறுநடைபோட்ட இந்த இளந்தென்றல் போகும்பாதையினை முத்தமிட்டு அந்த வானமேவசப்படும் அந்த இனிய தேவதையின் வரிகளில் தூரிகைதொட்டு எழுதத் தொடங்கினான்..

(7வது ஆண்டு நிறைவுப் போட்டியில் மூன்றாவது பரிசுபெற்ற சிறுகதை)

**வாழ்த்துகிறோம்!**

நோர்வே பத்திரிகையாளர் சங்கமும்
நோர்வே பத்திரிகைத்துறை கல்வி நிறுவனமும்
சர்வதேசதமிழர் ஆசிரியர் திரு.என். எஸ். பிரபு
அவர்களுக்கு விருதொன்றினை வழங்கிக்
கௌரவித்துள்ளனர். சர்வதேச தமிழரின் கொள்கை,
சேவைக்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. இந்த
விருதைப் பெறும் முதலாவது தமிழர் இவராவார்.
சர்வதேச தமிழர் சஞ்சிகைமூலம் தமிழ்த்தொண்டு
புரிந்துவரும் திரு.என்.எஸ்.பிரபு அவர்களுக்கு
பூவரசு கலை இலக்கியப் பேரவையின் சார்பில்
எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
வாழ்க!

அன்புடன்
இந்துமகேஷ்.

# அவுங்க உறவுக்காரங்க.

மகனின் சோதனைக் காசை எப்படிக் கட்டுவது என்ற யோசனையில் ஒழுங்கையில் நடந்து போனார் சோமண்ணை.

"இந்தக் கவுன்சில்க்காரங்கள் என்ரை பென்சன் காசைத் தந்தால் நான் ஏன் கஸ்ரப்படவேணும்? அரசாங்கத்தின்ரை காசைத் தாறதுக்கும் இவங்களுக்கு வயித்துக்கை குத்துது!"

சோமண்ணை வசதியா இருக்கேக்கை எல்லாருக்கும் வாரிக் கொடுத்த மனுசன் இன்னைக்கு கெட்டு நொந்து போனாப்பிறகு அந்தாளைக் கண்டாலே ஓடி ஒளிகிறாங்கள். இண்டைக்கு அந்த மனுசன்ரை சகோதரங்களின்ரை பிள்ளையள் எல்லாம் வெளிநாட்டிலை.

"சரி இன்னுமொருக்கா உவள் தங்கச்சியிட்டை கேட்டுப் பார்ப்பம்." என்றபடி படலையைத் திறந்தார் சோமண்ணை.

"மச்சான் எப்பிடி கொழும்புப்பயணம் எல்லாம்? பிள்ளையள் எல்லாம் வெளிநாட்டிலை சுகமா இருக்கினமோ?" என்றார் சோமண்ணை.

"ஓம் ஓம் அவங்களுக்கு என்ன குறை?" என்று அலுத்தார் மச்சான்.

"அண்ணையே எப்ப வந்தநீ. இரு. இந்தா அண்டைக்கு காசு ஐநூறு கேட்டனீயெல்லே. இந்தா இதிலை ஆயிரம் இருக்கு. பிறகு ஆறுதலாத் தா!" என்றாள் தங்கை.

சோமண்ணைக்கு ஒன்றுமாய் விளங்கேல்லை. "எப்பிடி எண்டாலும் கூடப்பிறந்த சகோதரம் தானே!" என்று சந்தோசப்பட்டுக்கொண்டு நன்றி கூறிப் போனார் அவர்.

"ஏனப்பா ஆயிரத்தைக் குடுத்தனீர்? அண்டைக்கு அந்த மனுசன் கஸ்ரப்படேக்கை வைச்சிருந்துகொண்டு இல்லை எண்டனீர். இண்டைக்கு...?"

"எல்லாம் விசயமாத்தான். அண்ணையின்ரை ஒருவருசப் பென்சன்காசு வந்திட்டுதாம் எண்டு அவற்ரை கந்தோர் ஐயா சொன்னவர். ஆயிரம் குடுத்தாத்தானே பத்தாயிரம்வாங்கலாம்!" என்றாள் மனைவி.

தோள்துண்டை மறந்துவிட்டுப்போய் மீண்டும் எடுக்க வந்த சோமண்ணைக்கு அவர்களின் பேச்சைக்கேட்டு உலகமே சுழன்றது.

மட்டுவில் ஞானக்குமாரன்.



# யாழ்.நூலகம்?




உடைந்துபோயுள்ள கலைமகள் சிலை. புகையும் கரியும் மண்டிப்போயுள்ள இடிபாடுகள் மலிந்த கட்டிடம் என்பவையே பிரசித்திபெற்ற யாழ். நூலகத்தின் இன்றைய எச்ச சொச்சங்கள்.

யாழ்ப்பாணத்தின் பிரதான வீதியின் தொடக்கப்புள்ளியான ஒருமூலையில் புதர்களும் புற்களும் மட்டுமின்றி மிதி வெடிகளும் கண்ணி வெடிகளாலும் சூழப்பட்டிருந்த முன்னாள் பொதுநூல்நிலையக் கட்டிடம் இப்போதும் தேடுவாரற்று யாழ்ப்பாண மக்களைப் போலக் காட்சி தருகின்றது.

முன்னர் ஒரு காலத்தில் செழிப்புடன் இருந்தது என்பதைக் கோடிட்டுக் காட்டும் ஒரு சான்றாக இருப்பது சிதைந்து எஞ்சியுள்ள மாடிக்கட்டிடம் மாத்திரமே.

ஆர்.தயாபரன்

தீண்டுவதற்கு எவருமேயில்லாத திறந்தவெளிக் கலையரங்கம். பெயர்கூட அழிக்கப்பட்டுவிட்டு சுப்பிரமணியம் பூங்கா, கற்குவியல்களாய்க் கிடக்கும் முன்னாள் மாநகர சபை, பூசி மெழுகி புதுப் பொலிவு பெற்று நிற்கும் துரையப்பா விளையாட்டரங்குக்கு மத்தியில் இருக்கும் உயர்ந்த மாடிக்கட்டிடம்தான் முன்னாள் பொது நூல் நிலையம் என்பதை இன்றைய இளம் சந்ததியினர் அறிந்திருக்க மாட்டார்கள் என்றே கூறலாம்.
துரதிர்ஷ்டவசமான அந்தச் சம்பவம் நடந்து முடிந்து பதினேழு ஆண்டுகள் பறந்து ஓடிப்போய் விட்டன. 98 ஆயிரத்திற்கும் அதிகமான நூல்கள் இரவல் கொடுக்கும் பகுதி, சிறுவர் பகுதி, பத்திரிகைகள் மற்றும் மாத இதழ்கள் என்பன கீழ்த்தளத்திலும் உடனுதவும் பகுதி, கேட்போர்கூடம் என்பன மேல்தளத்திலுமாக இருந்தது.
யாழ்ப்பாண பொதுநூல்நிலையம் சனக் கூட்டம் நிரம்பி வழிந்தாலும் ஊசிவிழும் சத்தம்கூடக் கேட்கும் அளவுக்கு நிசப்தம் எங்கும் குடிகொண்டிருக்கும்.
உடனுதவும் பகுதிக்குள் காலை ஏழு மணிக்குப் புகுந்தவர்கள் மாலை ஏழு மணிவரை புத்தகங்களின் பக்கங்களுக்குள் மூழ்கிக்கிடப்பது சர்வ சாதாரண நிகழ்வுகளாக அன்றிருந்தது.
1981 மே 31ம் திகதி நள்ளிரவுவரை அறிவுக்கு விருந்து கொடுக்கும் ஆலயமாக மாபெரும் பொக்கிஷமாகவே இந்த நூல்நிலையம் தொழிற்பட்டு வந்தது.
ஆனால் மேற்குறிப்பிட்ட திகதியுடன் இன கலாசார சீரழிப்பை தமிழ் மக்கள் எதிர்நோக்கி நிற்கின்றனர் என்பதற்கு மௌன அடையாள சின்னமாக உயிரற்ற அந்த நூல்நிலைய சிதைவுகள்காட்டி நிற்கின்றன.
யாழ் மாவட்டத்திற்கான அபிவிருத்திசபைத் தேர்தல் நடைபெற்ற வேளையில் இடம்பெற்ற சிறு அசம்பாவிதத்தை சாட்டாக வைத்து கலாசார அழிப்பிற்காக எரியூட்டப்பட்டது இந்தப் பொதுநூல் நிலையம் சிறு அசம்பாவிதம் நிகழ்ந்ததைத் தொடர்ந்து யாழ் நகரக் கடைகள் தீக்குளிக்க வைக்கப்பட்டன.
ஈழநாடு பத்திரிகை அலுவலகம் அக்கினிக்குள் ஆழ்த்தப்பட்டது.
இவற்றின் மத்தியில் பொதுநூல்நிலையம் எரியூட்டப்பட்டது.
பத்திரிசியார் கல்லூரியின் மேல்மாடியிலிருந்து தீச் சுவாலைகளைக்கண்ட வண.பிதா தாவீது அடிகளார் மாரடைப்பினால் மரணத்தைத் தழுவிக்கொண்டார்.
அந்தவேளையில் ஆட்சியிலிருந்த ஐ.தே.கவினர் உட்பட ஆட்சிபீடமேறும் பலரும் இந் நூல் நிலையத்தைத் திறந்து வைப்பதாகக்கூறும் வார்த்தைகள் காற்றில் கரைந்துபோவதே வரலாறாகி வருகிறது.ஆணைக்குழுக்களும் விசாரணைகளும் பக்கங்களை நிரப்பிவைக்கவேயன்றிப் பலன் எதையும் விளைவித்து விடவில்லை.



யாழ்ப்பாண பொது நூலகம் தீக்கிரையாக்கப்பட்டமையின் 17வது நினைவு தினம் கரிநாளாக அனுஷ்டிக்கப்பட்டது.
புளொட், ஈபிஆர்.எல் எவ் ஆகியன இணைந்து இப்பிரகடனத்தை விடுத்திருந்ததுடன் பாடசாலை மாணவர்கள் உத்தியோகத்தர்கள்உட்பட அனைவரையும் கறுப்புப் பட்டியணிந்து இந்நாளைக் கரிநாளாகவும் கடைப்பிடிக்க வேண்டுகோள் விடுத்திருந்தன.
யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்களின் இதயத்திலிருக்கும் கறுப்பு நினைவுகளை புலப்படுத்தும் இந்த நடவடிக்கையூடாக புனரமைப்புப் பணிகள் துரித கெதியில் மேற்கொள்ளப்படவேண்டும் என்ற செய்தி எடுத்துரைக்கப்பட்டுள்ளது.
யாழ். பொது நூலகம் எரிக்கப்பட்டது தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியல் துறை முக்கியப் பிரமுகர் கருத்து தெரிவிக்கையில் ஸ்ரீலங்கா அரசாங்கம் கால காலமாக தமிழரின் பாரிய சொத்தான கல்வியைச் சிதைப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பதாகவும் அன்று பொதுநூலகத்தை தீயிட்டனர் இன்று பல பாடசாலைகள் இராணுவ முகாம்களாக இருக்கின்றன.எனவே பொதுவான உடன்பாட்டை வைத்துக்கொண்டே சகல அரசாங்கங்களும் செயற்படுகின்றன என்று ஒரு கலந்துரையாடலில் தெரிவித்தார்.
யாழ்ப்பாண இராசதானிமீது கோட்டை இராசதானிபடையெடுத்த போதும் யாழ்ப்பாண முத்திரைச் சந்திக்கு சமீபமாக நாயன்மார்கட்டு பகுதியிலிருந்த சரஸ்வதிமஹால் என்ற நூலகம் தீயிட்டுக் கொளுத்தப்பட்டதாம். 14ம் நூற்றாண்டுக்கு முற்பட்ட பழைய சுவடிகள்இத்தீயினால் நாசமாக்கப்பட்டன.
1984ம் ஆண்டு செப்டம்பர் 1ம் திகதி பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி நூலகமும் 1986ல் காரைநகரில் "குளோரைட்"நூலகமும் ஸ்ரீலங்காவின் ஆயுதப் படையினரால் நாசமாக்கப்பட்டுள்ளன.
டாக்டர் ஐசாக் தம்பையா,சி.பொன்னம்பலம்,க.மு.செல்லப்பா போன்ற யாழ்ப்பாண பிரமுகர்களின் முயற்சியால் 1934 ஜூன் 9ல் ஆரம்பிக்கப்பட்டது.
யாழ்ப்பாணப் பொதுநூல் நிலையம் ஜூலை முதலாம் திகதியன்று 844 புத்தகங்களுடனும் 30 பத்திரிகைகளுடனும் ஆஸ்பத்திரிவீதியில் மின்சார நிலையத்திற்கு எதிராக வாடகைக் கடையொன்றில் தொடங்கப்பட்டது.
இது 1935 ஜனவரி முதலாம் நாளில் யாழ்ப்பாணப் பட்டினசபையின் அப்போதைய தலைவர் ஆர்.ஆர்.நல்லையாவினால் பொறுப்பேற்கப்பட்டது.
டாக்டர் ஐசாக் தம்பையா, டாக்டர் சுப்பிரமணியம் போன்றோரால் வெளிநாடுகளிலிருந்து நூல்கள் பெறப்பட்டு பொதுநூலகத்திற்கு அன்பளிப்புச் செய்யப்பட்டது.
1952ல் யாழ்ப்பாண மாநகர முதல்வராக இருந்த சாம் ஏ.சபாபதியால் ஜூன் 14ல் சிறப்பான சகல வசதிகளையும் கொண்ட பொது நூலகம் அமைக்கப்பட்டது.

அப்போது மாநகரசபை உறுப்பினர்களில ஒருவராக இருந்த அல்பிரட் தங்கராசா துரையப்பாவின் பிரேரணையை ஏற்று யாழ்ப்பாண நூலக மத்திய சபை அமைக்கப்பட்டது குறிப்பிடத் தக்கது.நூலக மத்திய சபையின் உப தலைவரக அப்போதைய பத்திரிசியார் கல்லூரி அதிபர் வண.பிதா.லோங் செயற்பட்டார் என்பதும் டில்லி சர்வகலாசாலைப் பேராசிரியர் ஆர்.ஆர்.ரங்கநாதனை வரவழைக்க இவர் பெரும் பங்காற்றினார் என்பதும் இங்கு கட்டிக்காட்ட வேண்டியதாகும்.

1953 மார்ச் 29ல் இந்நூலகத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது.

இந்நிகழ்வில் மாநகர முதல்வர்சாம் ஏ.சபாபதி, அமெரிக்கப் பிரதிநிதி ஓ.கொரி, இந்தியத் தூதரகப் பிரதிநிதி சித்தார்சாரி நூலகசபை உபதலைவர் லோங் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

1954 ஒக்டோபர் 11ம்திகதி அப்போதைய மாநகர முதல்வர் அ.த.துரையப்பாவினால் திறந்து வைக்கப்பட்ட நூலகம் 22 வருடம் ஒரு மாதம் இருபது நாட்கள் இயங்கிய நிலையில் தீக்கிரையாக்கப்பட்டுவிட்டது.

இதனைப் புனரமைப்பு செய்வதற்காக தென்னிலங்கை எங்கும் புத்தகமும் செங்கல்லும் சேகரிக்கப்பட்டு வருவதாகச்சொல்லப்படும் செய்திகளை கேட்டு முன்னாள் பொது நூலகத்தின் இரண்டு கட்டிடங்களும் சிரிக்கிறதா? அழுகிறதா என்பதைத்தான் இப்போதும் இனங்காண முடியவில்லை.

தற்போது கண்டி வீதியில் தற்காலிக பொதுநூலகம் அரசியல் இலாபம் பெறும்நோக்கில் இவ்வருட ஜனவரி தைப்பொங்கல் தினத்தில் திறந்து வைக்கப்பட்டது.திறக்கப்பட்ட நிலையிலே இன்று இயங்குகின்றது.ஒன்பது ஆயிரம் புத்தகம்மட்டும் இன்னும் உள்ளது.இந்திய தமிழ்நாட்டு அரசாங்கம் வழங்க முற்பட்ட புத்தகங்கள் இன்னும் வந்து சேரவில்லை.

இதற்கு பொதுநூலகர் புத்தகங்கள் அடங்கிய பட்டியலை தயாரித்து வருகின்றார்.தற்காலிக பொதுநூலகத்தில் ஐம்பது புத்தக 'செல்'மட்டுமே இருக்கின்றன.

சிறுவர்கள் பகுதிக்கு தேவையான உபகரணங்கள் வந்துள்ளன.ஆனால் அவற்றை சிறுவர்கள் பயன்படுத்த முடியாத நிலையுள்ளது.

யாழ். செயலகத்தில் இருந்து இயங்கும் மின் பிறப்பாக்கி பயன்படுத்தப்படுகின்றது.

தற்காலிக பொதுநூலகத்தைத் திறந்து வைத்ததைத் தொடர்ந்து எந்த மூச்சும் அரசாங்கம் பொதுநூலகம் தொடர்பாக வெளியிடவில்லை.

(நன்றி: வீரகேசரி வாரவெளியீடு 07.06.98)




நூல்கள். . . .
சொற்பொழிவுகள். . .

தமிழகத்தின் தலைசிறந்த எழுத்தாளர்களான
அகிலன், நா.பார்த்தசாரதி,இந்திரா பார்த்தசாரதி,
கண்ணதாசன்,பாலகுமாரன்,ஜெயகாந்தன்,சுஜாதா,
மற்றும் லக்ஷ்மி,சிவசங்கரி,இந்துமதி ஆகியோரின்
நாவல்கள்,சிறுகதைகள்.
கவிஞர் கண்ணதாசனின் அர்த்தமுள்ள இந்துமதம்,மனவாசம், வனவாசம்
உட்பட 30க்கு மேற்பட்ட நூல்கள்-
பாரதியார் கவிதை,கதை,கட்டுரைகள்
பாரதிதாசன் கவிதை,கதைகள்,கட்டுரைகள்

கவிஞர் கண்ணதாசனின் திரைப்படப்பாடல்கள்
கவிஞர் வைரமுத்துவின் திரைப்படப்பாடல்கள்
கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் திரைப்படப்பாடல்கள்
கண்ணதாசன்,வைரமுத்து, மேத்தா, நா.காமராசன் ஆகியோரின்
கவிதைத்தொகுதிகள் மகாபாரதம், இராமாயணம், பகவத்கீதை,
திருக்குறள் உட்பட உங்களுக்குத்தேவையான அனைத்து நூல்களுக்கும்
எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.
அத்துடன் தமிழகத்திலிருந்து வெளியாகும் வார,மாத சஞ்சிகைகளும்
(தாமரை,கணையாழி,இலக்கியபீடம் உட்பட)
தரமான இலக்கிய சஞ்சிகைகளும்

தேவைப்படுவோர் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

S.Kandasamy,
Langlütjensand 2,
28259 Bremen,Germany.
தொலைபேசி—0421—585042

☐ கிருபானந்தவாரியாரின் சொற்பொழிவுகள்,
கவிஞர் கண்ணதாசனின் சொற்பொழிவுகள்
ஆடியோக் கசற்றுகளிலும் பெற்றுக்கொள்ளலாம்
☐ பகவான் ரஜனீஷ்(ஓஷோ)எழுதிய 30க்கும் மேற்பட்ட நூல்கள்.

# பூவரசு

இனிய தமிழ் ஏடு
இரு திங்கள் ஒன்று.

இதழ்-52
ஆடி-ஆவணி 1998

ஆசிரியர்:
இந்துமகேஷ்

வெளியீடு:
பூவரசு கலை இலக்கியப்பேரவை
ஜெர்மனி

Poovarasu
Tamilische Literatur Magazin
Juli-August '98

Herausgeber:
Poovarasu
Kultur und Literatur Organization
Germany

முகவரி:
Poovarasu
Sinniah Maheswaran,
Otto Brenner Allee- 56,
28325 Bremen,
Germany.

இனிய தமிழ் ஏடு

அடுத்த இதழில்...
பூவரசு
எட்டாவது ஆண்டு நிறைவுப்
போட்டிகள் பற்றிய
விபரங்கள்!

உலகமே நம் இல்லம்
உள்ளமெல்லாம் நம்சொந்தம்




910/09
http :\\www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)
பொள்ளாச்சி நசன்



## வயல்

விதைப்புக்கும் காலம் உண்டு
விதைத்தால்தான் உயிர்வாழும்
காலந்தவறா உழைப்பும் வேண்டும்
விதை விளையும் பயிராகும்
விளைந்ததைக் களை மூடக்கூடும்
களை பிரிக்கத் தெரியவேண்டும்
தயங்காததை அகற்றவேண்டும்
பயிர்கொல்லிகளும் மொய்க்கக்கூடும்
கிருமிநாசினிவகை தெரிந்து
தெளிப்பானாகவும் வேண்டும்
கதிர்முற்றும் பயிர்தேடி
காட்டுவிலங்கும் புகக்கூடும்
பரண் வேண்டும்
இருட்டு விழிவேண்டும்
பொறிஅமைக்கும் மதிவேண்டும்
அகப்பட்டதைக்
கொல்லும்கலை தெரியவேண்டும்
இத்தனைக்கும்
நெஞ்சினிலே ஓர்மம் வேண்டும்
அறுவடை உணவாக
உன்வயலைக் காத்துவர
உயிர்வாழ....
உயிர்களிடத்தே அன்புசெய்ய.

**கி.பி.அரவிந்தன்**
(நன்றி மௌனம் 4.,1994)





வாசித்தீர்களா?

இலக்கிய எழுத்தாளர்
பொ.கருணாகரமூர்த்தி அவர்களின்

## ஒரு அகதி உருவாகும் நேரம்.

(குறுநாவல் தொகுதி)

## கிழக்கு நோக்கி சில மேகங்கள்.

(சிறுகதைத் தொகுதி)

...இவரது கதைகளில் மனிதம் தெரிகிறது. இசை தெரிகிறது இசைவும் தெரிகிறது. ஈழத்துப் படைப்புக்களுக்குப் புதிய அந்தஸ்தை ஏற்படுத்தும் முனைப்பும் தெரிகிறது. கதைகளைப் படிக்கையில் வித்தியாசமான அனுபவம் கிடைக்கிறது...

— க.ஆதவன், டென்மார்க்.

நூல்களைப் பெற
தொடர்புமுகவரி

**P.Karunaharamoorthy,**
**Skalitzer Str.142,**
**10999 Berlin, Germany.**